# வைகறை

இஸ்லாமிய குடும்ப சஞ்சிகை

இதழ் 19 விலை: 50.00



# BRIGHT®

## HOME APPLIANCES

Rechargable Lanterns




## BRIGHT LANKA TRADING COMPANY

Sales Outlets

**Pettah**
59, 2ND CROSS STREET
COLOMBO-11

**Dambulla**
519/01, KADA PAHA
ANURADAPURA ROAD,
DUMBULLA
066 228540 / 0817212732

HOT LINE : 011 4 932 932

Importers & Distributors : BRIGHT HOME APPLIANCES (PVT) LTD

வைகறை

இஸ்லாமிய குடும்ப சஞ்சிகை

இதழ்: 19 - ஒகஸ்ட் - ஒக்டோபர் 2010

முகப்புக் கட்டுரை

24-26

# நான் ஒரு முஸ்லிம்

04
ஒப்புதல் வாக்குமூலம்

09
ஈ மெயில் தொடர்பாக

11
கல்லூரி நாட்கள்

16
நாளைகளை நம்ப வேண்டாம்

27
தக்லீத்: புரிந்துகொள்வதற்கான சில குறிப்புகள்

33
குழந்தைகள்:
அழகு, சிரிப்பு, மழலை, மென்மை, சிணுங்கல்...

42
சிறுகதை – இலக்கு

# வைகறை

**இஸ்லாமிய குடும்ப சஞ்சிகை**

**இதழ்: 19**

**பிரதம ஆசிரியர்:**
பீ.எம்.எம். இர்பான் (நளீமி) B.A. (cey),
M.A. (Linguistics) PGD (Translation) - Sudan

**ஆசிரியர்:**
ஏ.ஸீ.எம். நதீர் (நளீமி) B.A. (cey)

**துணையாசிரியர்:**
நாஸிக் மஜீத் (நளீமி) B.A. (cey)

**ஆசிரியர் குழு:**
எம்.என். இக்ராம் (நளீமி) B.A. (cey)
ஏ.ரீ.எம். முர்ஷித் (நளீமி) B.A. (cey)
ஸீ.எம்.எம். ஸுபைர் (நளீமி) B.A. (cey)
மனூஸ் அபூபக்கர் B.A. (cey)
யூ.கே. றமீஸ் (நளீமி)
B.A. (cey) M.A. (Sociology)
ஏ.எஸ். ஹஸன் (நளீமி)
B.A. (cey) M.A. (Yeman)
அஹ்ஸன் ஆரிப் (நளீமி)
(National Dip. in VPT)
இன்ஸாப் ஸலாஹுத்தீன் (நளீமி)

**தளக் கோலம் அட்டை, வடிவமைப்பு:**
முஹம்மத் ஸப்ரான்






ISSN: 1800-0665




Editor
"Vaikarai"
Meelparvai Media Centre
06. Abhaya Place,
Kolonnawa Road,
Colombo 09.

Tel/Fax: 011 2688341
Mob: 0772227569
vaikarai.mag@gmail.com
www.meelparvai.net/vaikarai



தனி இதழ்: 50.00
சந்தா விபரம்:
ஒரு வருட சந்தா - 300/=

## ஆசிரியர் கருத்து

அன்புடன் உங்கள் அனைவருக்கும்

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

வைகறையின் 19 ஆவது இதழில் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அல்ஹம்துலில்லாஹ். வைகறையின் வாசகர்களின் அதிகரிப்பும் அவர்களது பங்களிப்பும் எம்மை தொடர்ந்தும் உத்வேகத்துடன் இயங்கச் செய்கின்றது.

மாறிவரும் சமூக சூழலில் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்வதோடு தமது குடும்பம், சமூகம் என்பவற்றின் பாதுகாப்பிலும் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

தகவல் தொடர்பு சாதனங்களின் அதிகரிப்பு பல நன்மைகளை எமக்கு தருகின்றபோதும் அவற்றினால் ஏற்படும் பாதிப்புகளும் குறிப்பிடத்தக்கவை. இவற்றினால் சமூகத்தில் மிகச் சாதரணமாக எல்லாப் பாவங்களும் அரங்கேறுவதைக் காண்கிறோம். இனி வரும் காலங்கள் இதைவிட சவாலாக அமையும் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

நரக நெருப்பை விட்டு உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

எனவே, குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் பாதுகாக்கப்பட வேண்டும். அந்தவகையில், குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் வைகறை அரவணைத்துச் செல்வதை நீங்கள் அவதானிக்கலாம்.

வழமைபோன்றே வைகறையின் இவ்விதழிலும் பல வித்தியாசமான அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. வாசகர்கள் இவற்றிலிருந்து பயன்பெற வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

புதிய எழுத்தாளர்களுக்கு தொடர்ந்தும் சந்தர்ப்பம் அளித்து வருகின்றோம். மாணவர்களை எழுத்துலகிற்கு உள்வாங்குவதற்கு ஆசிரியர்கள் பங்களிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

வைகறை இன்னும் பலரைச் சென்றடைய வேண்டியிருக்கின்றது. அதற்கு வைகறையின் ஒவ்வொரு வாசகரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என்று நம்புகின்றோம்.

இன்ஷா அல்லாஹ் வைகறையின் 20 ஆவது இதழ் நிறைய மாற்றங்களுடனும் புதிய அம்சங்களுடனும் வெளிவரும் என எதிர்பார்க்கலாம். இவ்விதழ் குறித்த உங்கள் கருத்துக்களையும் வைகறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்த உங்கள் கருத்துக்களையும் சுருக்கமாக எழுதி அனுப்பி வையுங்கள்.

இன்ஷா அல்லாஹ் இன்னுமொரு இதழில் சந்திப்போம்.

அன்புடன்
ஆசிரியர்

# அது எனது வாழ்க்கையில் மிக மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பம்


எனது கன்னங்களினூடே கண்ணீர் வழிந்தோடியது. எனது உதடுகள் புன்னகையால் மலர்ந்திருந்தன. நான் அதே இடத்தில் அல்லாஹ்வுக்காக ஸுஜூத் செய்தேன்.

அல்லாஹ்வுக்கு நன்றி சொல்வதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. உண்மையில் அது அவனின் அருளும் எனது பெற்றோரின் பிரார்த்தனைகளுமாகும். எனவேதான், எனக்கு அதனை சாதிக்க முடியுமாக இருந்தது.

எம் அனைவருக்கும் வெற்றிகள் கிடைப்பதுண்டு. அப்போதெல்லாம் தமது திறமைகள் மீதும் ஆற்றல்கள் மீதும் நாம் அதிக நம்பிக்கைக் கொண்டிருப்பதைக் காணலாம். உண்மையில் வெற்றிகளைத் தருவது அல்லாஹுத்தஆலாவே. மிக மகிழ்ச்சிகரமான அந்த சந்தர்ப்பத்தில் நினைக்க வேண்டிய அவனை மறந்து விடுகின்றோம்.

இனிமேலாவது, அவனுக்காக ஸுஜூத் செய்வோம்.





யா அல்லாஹ்!
என் உள்ளத்தை நீ பார்க்கிறாய்;
உன்னைத் தவிர வேறெவராலும் அதனைப் பார்க்க முடிவதில்லை.

சுவர்கள் காரை பெயர்ந்து, கூரை இடிந்து
சிதைந்து கிடக்கிறது அந்த வீடு.
அதில் ஓநாய்கள் ஊளையிடுகின்றன. குரங்குகள் தாவித் திரிகின்றன.
ஆந்தைகளும் வௌவால்களும் பறந்து ஒலியெழுப்புகின்றன.

சிலபோது அதனுள் ஒளி பிரகாசிப்பதுண்டு,
சந்திரனின் குளிர்ந்த கிரணங்கள் ஊடுருவிப் பரவுவதுண்டு.
ஆனால், பல நேரங்களில் எல்லா ஒளியும் அணைந்து இருள் மண்டி
விடுகின்றது.
சிலந்திகள் ஓடி ஓடி வலை பின்னத் தொடங்கி விடுகின்றன.

# ஒப்புதல் வாக்குமூலம்

அஷ்-ஷெய்க்
பீ. எம். எம். இர்பான்

சிலபோது வசந்தத்தின் கரம் அதனை மெல்லத் தடவுகின்றது.
அப்போது அதன் ஜன்னல்களில் கூட பூப்பூக்கிறது.
வானம் பாடிகள் கானம் இசைக்கின்றன.
பட்டுப்பூச்சிகள் இழை பின்னுகின்றன.
இசைபாடும் தேனீக்கள் மதுரத் தேன் சுரக்கின்றன.

மற்றும் சில வேளைகளிலோ அதில் பூகம்பம் வெடிக்கிறது.
ஒரு சுவர் கூட எஞ்சுமா என்று நினைக்குமளவு ஆடிப்போகிறது.
உனது அருள் என்ற வானத்திலிருந்து உதவிக்கயிறு இறங்கவில்லையெனில்,
அந்த வீடு எப்போதோ தரைமட்டமாகி இருக்கும்.

நீயே அருள்நிறைந்த கர்த்தா.
தீர்ப்புகளை எழுதுபவன் நீதான்.
சோதிப்பவனும் பலப்படுத்துபவனும் மறைப்பவனும்
வெளிப்படுத்துபவனும் நீயே.
நான் வெறும் இல்லாமை.
அனைத்து நேர்வழியும் உன்னிடமிருந்தே கிடைக்கிறது.
எல்லா ஒளியும் உன் ஒளியிலிருந்தே பிரிகிறது.

எஜமானே!
'பாவங்களில் மிகப் பெரும் பாவம் அறிந்தவர்கள் செய்யும் பாவமே!' என்கிறார்கள். ஆனால்-உன் அருளின் துணையின்றி பாவத்திலிருந்து தப்ப முடிந்த ஞானி எவரிருக்கிறார்?
நீயே உள்ளங்களைப் படைத்து சீர்படுத்தினாய்.
''நிச்சயமாக உள்ளம் (நஃப்ஸ்) தீமை செய்யும்படி தூண்டக்கூடியதாகவே இருக்கிறது - ரட்சகன் அருள் புரிந்ததைத் தவிர'' (யூஸுப்: 53) என்று சொன்னவனும் நீதான்.

ரட்சகா!
நான் முதன்முதல் சுவாசித்ததும், பேசியதும், கேட்டதும், பார்த்ததும், நடந்ததும், நேர்வழி பெற்றதும் உன்னால்தான்.
எப்போது உன் கட்டளையை மீறிச் சென்றேனோ அப்போதுதான் நான் பாதை தவறினேன்.

யா அல்லாஹ்!
என்னை விட்டு உன் கோபத்தை உயர்த்திவிடு.
இதோ எல்லா விதண்டாவாதங்களையும் நான் களைந்துவிட்டேன்.
உனது பேராற்றலின் முன்றலில் பணிவு என்ற ஆடையை அணிந்திருக்கிறேன்.

நான் உனது அடிமை.
நீ என்னைக் கைவிடமாட்டாய்
உனது மாட்சிமைக்கும் ரட்சணியத்துக்கும் முன்னால் பணிந்த எந்த அடியானையும் நீ கைவிட்டதில்லை.

எஜமானே!
இருளிலிருந்து ஒளிக்கு...
இழிவிலிருந்து கண்ணியத்துக்கு உனது அருள் கயிற்றால் என்னை இழுத்தெடு.

நீயே உண்மையான கண்ணியவான்.
எனது பாவங்கள் உன்னை எந்தவகையிலும் பாதிக்கப் போவதில்லை.
எனது நன்மைகளும் உனக்குப் பயனளிக்கப் போவதில்லை.
எமது எல்லாப் பாவங்களும் ஒன்று திரண்டாலும் உனது அதிகாரத்தில் சிறிதளவு கூட குறையப் போவதில்லை.
''உங்களது பிரார்த்தனை இல்லையெனில் என் ரட்சகன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான்'' (அல் புர்கான்: 77)
என உனது தூதர் மூலமாக சொல்ல வைத்தாய்.
இதோ உன் முன்னால் நான் மண்டியிட்டிருக்கிறேன்.
நானே தேவையுள்ளவன்... நானே பிரச்சினை... நானே கேள்வி!!

நான் இல்லாமை; நீ இருப்பு
என்னைக் கடைத்தேற்று!
உலக வாழ்வில் மோகம் கொள்ளும் நஃப்ஸைத் தாண்டி,
உனது அருகாமையை, அன்பை, ஒளியை, திருமுகத்தை நாடி வர



**எனது பாவங்கள் உன்னை எந்த வகையிலும் பாதிக்கப் போவ தில்லை. எனது நன்மை களும் உனக்குப் பயனளிக்கப் போவதில்லை. எமது எல்லாப் பாவங்களும் ஒன்று திரண்டாலும் உனது அதிகாரத்தில் சிறிதளவு கூட குறை யப் போவதில்லை.**

எனக்கு உதவி செய்.

வஸ்துகளைத் தேடி அடைய அடைய வறுமைக்கே
நான் தள்ளப்பட்டேன்.
பேராசைகளுக்குக் கீழ்ப்படிந்த போதெல்லாம்
விதம் விதமான பசி எனக்குள் எழுந்துகொண்டே
இருந்தது.
இவையெல்லாம் உப்பு நீர்; அருந்த அருந்த
தாகம்தான் அதிகரிக்கும் என்று என் பட்டறிவு
எனக்கு உணர்த்திவிட்டது.

நான் சுதந்திரம் என்று நினைத்ததெல்லாம் என்
தோலுக்குக் கீழ் ஒழிந்திருக்கும் மிருகத்துக்குப்
பணிவதைத்தான்.
சடவாத இயந்திரத்தனமும் நிர்ப்பந்தங்கள் என்ற
சிறையுமே என்னை அடிமைப்படுத்தி
வைத்திருந்தன.
வானத்தில் சிறகடிப்பதாய் எண்ணிக் கொண்டு
பூமியின் பள்ளத்தாக்கினுள் நான் விழுந்து
கொண்டிருந்தேன்.
என்னுள் மறைந்திருந்த சாத்தான் என்னை
ஏமாற்றிக் கொண்டிருந்தான்.
பொய்யினால் கவிதை பின்னி, கற்பனையால்
அழகு செய்து, நறுமணத்தால் தோய்த்தெடுத்து,
வார்த்தைகள் எனும் மணிமண்டபத்தில் வைத்து,
உணர்ச்சி நரம்பை மீட்டி என்னை அவன் திசை
திருப்பிவிட்டான்.
கைசேதம் என்ற விழிப்புணர்வால்
இடைக்கிடையே என்னை நீ தட்டி
எழுப்பியதால்தான் இவ்வளவாவது
பிழைத்திருக்கிறேன்.

எனது நோக்கமும் தேட்டமும் இனி நீதான்.
உன்னை அடைய எனக்கு உதவி செய்.
நீயல்லாத எந்த நோக்கமும் பேரிழப்புதான்.

'சத்தியம்' என்ற நாமம் கொண்டவனே!
உலகம் என்ற பயணம் சத்தியமான உன்னை
எனக்குக் காட்டும் என்பதால்தான் ஏற்றுக்
கொள்கிறேன்.

அழகு என்பது உன்னிலிருந்து பிறப்பதால்தான்
அதன் முன்னால் நான் பிரமித்து நிற்கிறேன்.
நன்மை, நீதி, சத்தியம், சுதந்திரம் என்பவை உன்
அழகிய திருநாமங்களின் பிரத்தியட்ச
வெளிப்பாடுகள்.
அதனால்தான் அவற்றை நான் நாடி நிற்கிறேன்.

இது ஒரு பெரும் பயணம்-மாபெரும் ஹிஜ்ரத்!
இந்த ஹிஜ்ரத்தில் சமுத்திரங்களைத் தாண்ட
வேண்டியிருக்கும்;
ஆனால் அவற்றில் மூழ்கிவிடக்கூடாது.
பாரிய நெருப்பில் இறங்க வேண்டியிருக்கும்;
ஆனால், அதில் கருகி விடக்கூடாது.

உன் துணையின்றி இந்த ஹிஜ்ரத்தை மேற்கொள்ள
என்னால் முடியாது.
இந்தப் பயணத்தில் சக்திகொடு!
இந்தப் பயணத்தில் தூய எண்ணமும் முனைப்பும்
உழைப்புமே அடிப்படை நிபந்தனைகள்.
ஓர் ஏழை அடியானிடம் இருக்க முடியுமான
சொத்தும் இவைதான்.
ரட்சகா!
நான் பரம ஏழை
இல்லாமையைவிட பரம ஏழ்மை
வேறென்னதான் இருக்க முடியும்!
எனது கட்டுச் சாதம், எமது பலம், எமது பார்வை,
எனது ஒளி...
எல்லாமே உன்னால் வந்தவை - நீ தந்தவை!

யா அல்லாஹ்!
''நீ தூயவன். உன்னைத்தவிர வேறு கடவுள்
இல்லை.
நிச்சயமாக நான் அநியாயக்காரனாக
இருந்துவிட்டேன்'' (அன்பியா: 87)
''நபியே கூறுவீராக; நிச்சயமாக எனது
தொழுகையும், (இதர) வணக்கங்களும், என்
வாழ்வும், மரணமும் அகிலங்களின் ரட்சகனான
அல்லாஹ்வுக்கே உரியவை'' - (அன்ஆம்: 62)

## உண்மையான மனிதநேயம்

ஒரு இளைஞன் ஒரு சீர்த்திருத்தவாதியை நோக்கி உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுடைய தோற்றம் அவரை வியக்க வைத்தது. அப்போது அந்த சீர்த்திருத்தவாதி அந்த இளைஞனைப் பார்த்து; ''இளைஞனே, உன் அழகை மெருகூட்ட விரும்புகின்றாயா?'' எனக் கேட்டார். அதற்கு அந்த இளைஞன் 'ஆம்' என்று கூறவே;

''நீ பேசினால் உண்மையைப் பேசு; யாராவது உன்னுடன் கதைத்தால் ஆர்வத்துடன் செவிமடுத்துக் கேள்; உடன்படிக்கை செய்தால் அதைப் பாதுகாத்துக் கொள்; வாக்குறுதியளித்தால் அதை நிறைவேற்று; இதுவே உன் அழகை மெருகூட்டுவதற்கான உண்மையான மனிதநேயமாகும்'' என அந்த சீர்திருத்தவாதி கூறினார்.

முஜ்தமாவிலிருந்து ஸல்ஸபீல்
இஸ்லாஹிய்யா வளாகம்

# நம்பிக்கைகளின் ஒளிக்கீற்றுகள்

சபானா

உலக வரலாற்றில் உஹத் மலைக்குன்று அளவிட முடியாத படிப்பினைகளின் சிகரமாய்த் திகழ்கின்றது. சாதாரண கட்டளையொன்று மீறப்பட்டதன் பின்னரான விளைவுகள் யுத்த களத்தில் மட்டுமன்றி சமூக வாழ்க்கைத் தளத்திலும் பெரும் துன்பியல் வடுக்களை ஆழப்பதித்தது. அக்குன்றின் வில்வீரர்களின் ஒரு கனச் சிந்தனை - அடுத்த செயற்பாடு யுத்தத்தின் போக்கிலேயே திருப்புமுனையாய் அமைந்தது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பல் உடைந்தது, அவரது மேனியில் இரத்தம் தோய்ந்தது, நபித்தோழர்கள் பலரும் ஷஹீதாக மதீனாவில் எத்தனையோ பெண்கள் விதவையாகவும், எத்தனையோ சிறுவர்கள் அநாதைகளாகவுமாயினர்; முஸ்லிம்களின் பொருட்கள் பலவும் இழக்கப்பட்டன. மதீனத்து வீடுகளின் பொருளாதாரச் சுமைகளும், வறுமையும் அழையா விருந்தாளிகளாகின.

எமது கலாசார விழுமியங்களைக் காத்து, ஈமானிய ஒளியினால் உள்ளங்களை உயர்ப்பித்து, சத்திய மார்க்கத்தின் காவலரண்களாய் எமது குடும்பங்களே திகழ்கின்றன. இஸ்லாமியக் குடும்பங்களைக் கட்டுடைப்புச் செய்வதே மார்க்கத்தின் வீழ்ச்சிக்கு அடிப்படையாகும். அதனை எதிர்ப்போராய் தாய்மார் திகழ்கின்றனர். அவர்கள் உஹத் குன்றின் வில் வீரர்கள் போன்று இரவுபகலாய் குடும்பக் கட்டுக் கோப்பை பக்குவமாய்ப் பாதுகாத்து வருகின்றனர்.

ஆனாலும், துரதிஷ்டவசமாக அவர்களின் சிந்தனைத் தளம்பல் ஷைத்தானியத்தால் ஆட்டுவிக்கப்படுகின்றது. அவர்களின் சறுக்கல் முழு உம்மத்தின் சறுக்கலாகவே மாறிவிடும். உஹத் வீரர்கள் போன்று, சமூகத்தின் காவலர்களாய் எமது உம்மத்தின் இன்றைய தாய்மாரையும் நாளைய தாய்மாரையும் ஈமானிய வழியில் புடம்போட வேண்டிய கட்டாயத் தேவை காணப்படுகின்றது. அந்த வகையில் அவ்வாறான இலக்கை அடைந்துகொள்வதற்கான வழிகாட்டியாகவே குடும்ப சஞ்சிகை வைகறையினை நோக்குகின்றேன்.

வாசிப்புக் கலாசாரம் குன்றிப் போன எமது சமூகத்தில் வைகறையின் ஆகர்ஷிப்பு புதிய நம்பிக்கையூட்டுகின்றது. 'வைகறை' முழுக்குடும்பத்தையும் குறிப்பாக பெண்களை குவிமையப் படுத்தியுள்ளமை காலத்தின் கட்டாயத் தேவையெனலாம். அதன் கடந்த 18 ஆவது இதழில் வெளிவந்த அல்குர் ஆனால் துளிக்காத கண்ணீர், மஃரிபின் பின்னரான மெகா தொடர்களால் சேலைத் தலைப்பு கொண்டு துடைக்கப்படுகின்ற துயரத்தின் பின்னாலுள்ள அசிங்கத்தையும் போலித் தனங்களையும் ''தென்னிந்திய சினிமா'' என்ற கட்டுரை எமது சகோதரிகளை சிந்திக்க வைத்திருக்கும்.

பெண் விடுதலை இயக்கம், தஃவா பணியில் முஸ்லிம் பெண், இஸ்லாமிய சகோதரியின் பாதை, பெண்கள் தொழில் புரிதல், வாழ்வில் தடம்பதிப்போம், வாழ்வை உயிர்ப்பித்தல் போன்ற ஆக்கங்கள் நிச்சயமாக வைகறையினை வாசிக்கும் ஒவ்வொரு ஈமானிய ஆன்மாவையும் சிந்திக்கவும் செயற்படவும் உந்துதலை அளித்திருக்கும்; அளித்திருக்க வேண்டும்.

## எதிரொலி



ஒஸ்காரும், ஐஃபாவும் மட்டுமே அறிந்த எமக்கு 'மஹப்பா' பற்றிய செய்தியும், அது இஸ்லாமிய எழுச்சிக்கு கைகொடுக்கும் என்ற நம்பிக்கையும் அகத்தில் ஆத்மார்த்த திருப்தியளிக்கின்றது. மேலும், இவ்வாறான சிறந்த பிரதியீடுகள் பற்றிய விபரம் சமூகத்திற்கு வழங்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். எமது இளைஞர்கள் தடுக்கி விழும் இடத்தில் 'வாழப்படாத அழகிய வாழ்க்கைக்காக' என்ற ஆக்கம் ஒத்தடம் தருகின்றது. சிறுவர்களுக்கான அஷ்பால் பகுதி வைகறைப் பக்கங்களின் வண்ணம யமான ஒளிக் கீற்றுக்களாய் உள்ளன. நிறந்தீட்டலும், போட்டிகளும் எமது நாளைய தலைவர்களை வாசிப் புக் கலாசாரத்திற்கு அழைத்துச் செல்லும் போக்கும் மெச்சத்தக்கது.

குடும்பங்களில் சிறு முரண்பாடுகளே பூதாகரமாகி குடும்பத்தினை ஆட்டங்காணச் செய்கின்றன. விரை வான இவ்வுலக ஓட்டத்தின் சமூக இருப்பு, கல்வி முறைமையும் இளம் குடும்ப உறுப்பினர்களை உள ரீதியாக வெகுவாகப் பாதிக்கச் செய்கின்றன. எனவே, குடும்பப் பொறுப்புதாரர்களை முன்நிறுத்தி உளவ ளத்துணை தொடர்பான ஆக்கங்கள் வைகறையில் இடம்பெறவேண்டும். இஸ்லாமிய ஒழுக்கவியலின் இன்றியமையா நிலையை அழகாய் எடுத்தியம்பும் சிறுகதைகள் வைகறையின் பக்கங்களை அழகு படுத்த வேண்டும் எனவும் வேண்டுகிறேன். இன்னும் மாதந்தோறும் வைகறையின் வரவை எதிர்பார்த்துப் பிரார்த்திக்கிறேன்.

முடிவாக நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அவ்வப்போது அளிக்கும் பரிசுகளில் எளிமையான தாக ஆனால், பெறுமதியானதாக வைகறை இதழ் களையும் வழங்க வேண்டுமென தாழ்மையுடன் சக வாசகர்களைக் கேட்கிறேன். அது சிறந்தொரு ஸதகா வாகவும், எமது உள்ளங்களுக்கிடையிலான உறவைப் பலப்படுத்தும் சாதனமாகவும் இருக்கும்.

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே!

## வைகறையின் சந்தாதாரராகுங்கள்

கடந்த 8 வருடகாலமாக தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் இஸ்லாமிய குடும்ப சஞ்சிகையான வைகறையின் சந்தாதாரராகுங்கள். வருடத்திற்கு நான்கு இதழ்கள் வெளிவரும் வைகறையின் சந்தாதாரராகுவதன் மூலம் தொடர்ச்சியாக இதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒருவருட சந்தா: 300 ரூபா

உங்கள் பணத்தை காசுக்கட்டளையாகவோ, காசோலையாகவோ செலுத்தலாம். காசுக் கட்டளையாயின், Name: Meelparvai Publishers, Post Office - Grandpass எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

காசோலையாயின், Bank: Peoples Bank

A/C No: 056100153078164

Branch: Sri Sangaraja Mw, Colombo - 10.

என்ற வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும். காசுக்கட்டளையின் பிரதி அல்லது வங்கிப் பற்றுச் சீட்டின் பிரதியுடன் உங்கள் பெயர் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.




Meelparvai Media Centre
No: 06, Abhaya Place,
Kolannawa Rd, Dematagoda.
Colombo - 09
077 2227569


# ஈ மெயில் தொடர்பாக

சில வருடங்களுக்கு முன்னர் டென்மார்க் பத்திரிகைகள் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் வகையில் கார்டூன்களை வெளியிட்டன. அதைத் தொடர்ந்து முழு உலகின் கவனமும் அதன்பால் திரும்பியது. இந்நிலையில் நான் புகையிரதப் பயணமொன்றில் இருந்த போது ஒரு நண்பரை சந்தித்தேன். எமக்கிடையிலும் குறித்த விடயம்தான் பேசுபொருளாக மாறியது. அதுவரை நான் குறித்த சித்திரங்களைப் பார்த்திருக்கவில்லை.

அந்த சித்திரங்களை நீங்கள் பார்த்தீர்களா? என அவரிடம் கேட்டேன். அவர் உடனே தனது பேக்கைத் திறந்து அதிலிருந்து சில பிரதிகளை எடுத்தார். குறித்த சித்திரங்கள் எல்லாவற்றையும் அவர் பிரதி எடுத்து வைத்திருந்தார். அவர் என்னைப் போன்று எத்தனை பேருக்கு அதைக் காட்டியிருப்பாரோ தெரியவில்லை. அவரே அதைப் பிரச்சாரம் செய்யும் பொறுப்பை ஏற்றிருந்தார் போலும்!

எனக்கு ஒரு ஈ மெயில் (மின்னஞ்சல்) வந்தது. பன்றிகள் சிலவற்றுக்கு புனித அல்-குர்ஆனின் பிரதிகள் உணவாகப் போடப்பட்டிருந்தன. அவை அவற்றை சாப்பிட்டுக்கொண்டிருந்தன. அதன் கீழ் ''இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்தை அழித்தொழிக்க இவ்வாறெல்லாம் செய்கிறார்கள். இந்த ஈமெயிலை பலருக்கும் அனுப்பி எல்லோரையும் உணர்வூட்டுவோம்'' என குறிப்பிடப்பட்டிருந்தது.

மற்றுமொரு தடவை இப்படியொரு ஈமெயில் வந்திருந்தது. அல்குர்ஆனை சிலர் தமது பாதங்களால் மிதித்துக் கொண்டிருந்தனர். அதன் கீழ் ''இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்தை அழித்துவிட துடிக்கிறார்கள். அவர்களுக்கு எதிராக கிளர்ந்தெழுவோம்.'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.




டென்மார்க் பத்திரிகைகள் குறித்த கார்டூன் சித்திரங்களை வெளியிட்டதன் மூலம் உலக முஸ்லிம்களது மன உணர்வுகளையும் புண்படுத்தின. இந்த நிகழ்வின் பின்னர் முஸ்லிம் உலகம் விழித்துக்கொண்டது. நல்ல பல மாற்றங்கள் ஏற்பட்டன.

அண்மையில் Face book இணையமும் அந்த கார்டூன்களை திரும்பவும் பிரசுரித்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து உலகளாவிய ரீதியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் நமக்குத் தெரிந்தவைதான். இந்த விடயத்தைக்

அஹ்ஸன் ஆரிப்

கண்டித்து உலகின் பல பகுதிகளிலிருந் தும் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பித்தன. உலகளாவிய ரீதியல் லட்சக்கணக்கான முஸ்லிம் அங்கத்தவர்களைக் கொண்ட Face book தளம் ஏன் இவ்வாறான ஒரு வேலையைச் செய்தது என்ற ஒரு பெரும் கேள்வி காணப்படுகிறது. அதற்கெதிராக பல எதிர்ப்புகள் வந்தபோதும் அந்த இணையம் அவற்றை பொருட் படுத்தியதாகத் தெரியவில்லை.

இஸ்லாத்தின் எதிரிகளின் இவ்வாறான கீழ்த்தர மான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கன. அவற்றுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்தாக வேண் டும். இதில் மாற்றுக்கருத்து கிடையாது. ஆனால்,



இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்வதில் நாம் கவனமாக நடந்துகொள்ள வேண்டிய தேவையை ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம்.

இந்த நிகழ்வுக்குப் பின்னர் Face book இணையத் தளத்தை புறக்கணிப்போம் என்ற செய்திகள் அடங்கிய பல ஈமெயில்கள் எனக்கு வந்தன. ஒரே மெயில் பல தடவைகள் பலரிடமிருந்து வந்தன.

Face book தளத்தின் முகப்புப் பக்கத்தோடு, அதில் பிரசுரிக்கப்பட்ட கார்டூன்களையும் சேர்த்தே அனுப்பி யிருந்தார்கள் நம் சகோதரர்கள். இதன் மூலம் முஸ் லிம் சகோதரர்களே அந்தக் கார்டூன்களை தமது ஈமெயில்கள் மூலமாக முழு உலகிற்கும் அனுப்பி விட்டார்கள். Face book தளத்திற்கு செல்லாதவர்களும் அவற்றைப் பார்ப்பதற்குரிய வசதிகளை செய்து கொடுத்து விட்டார்கள். நபி (ஸல்) அவர்களது கார்டூன் களை வெளியிட்டமைக்காக அந்த இணையத்தளத்தை

**இஸ்லாத்தின் எதிரிகளின் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகள் கண்டிக்கத் தக்கன. அவற்றுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்தாக வேண் டும். இதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், இவ்வாறான பிரச்சினைகளை எதிர் கொள்வதில் நாம் கவன மாக நடந்துகொள்ள வேண்டிய தேவையை ஞாபகத்தில் வைத்துக் கொள்வோம்.**

புறக்கணிக்கச் சொல்லும் இந்த ஈமெயில்களே மீண்டும் அதே கார்டூன்களை பிரசுரிப்பதாயின் அந்த ஈமெயில் செய்திகளையும் நாம் புறக்கணித்தாக வேண்டு மல்லவா?

எனவே இவ்வாறான செய்திகள், ஈமெயில்கள், SMS கள் வரும் போது அவற்றைக் கவனமாக கையாள வேண்டும். பலரும் பல தேவைகளுக்காக இவ்வா றான ஈமெயில்களையும் SMS களையும் தயாரித்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல் லாம் நாம் மற்றவர்களுக்கு அனுப்பிக்கொண்டு பல்தேசிய கம்பனிகளுக்கு காசு சேர்த்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

எமக்கு வருகின்ற எல்லா செய்திகளையும் மற் றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. முக்கியமான, அவசியமான செய்திகளை மாத்திரம் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதும், அவசியமற்றவற்றை விட்டுவிடுவதும் தான் நல்ல முஸ்லிமின் பண்பு.

''விசுவாசிகளே! தீயவன் ஒருவன் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் அதை உடனே அங்கீகரித்து அறியாமையால் ஒரு சமூகத்தாருக்கு தீங்கிழைத்து விடாதிருப்பதற்காக அதைத் உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள். இல்லாவிடின் பின்னர் நீங்கள் செய்தவற்றுக்காக நீங்களே கைசேதப்படுவீர் கள்.'' *(ஸூறதுல் ஹுஜுராத்: 6)*

# கல்லூரி நாட்கள்

பர்ஹான் மன்ஸூர்

அழகானவை, இனிமையானவை, மறக்க முடியாதவை, ஒவ்வொரு மனிதனும் ஞாபகப்படுத்தும்; அவனது வாழ்வில் சந்தோசமாக கழித்த பொழுதுகள் கல்லூரியில் கழிந்த நாட்களே! அந்நாட்கள் மீண்டும் வாராதா என்று பலரும் ஆசைப்படுவதுண்டு. அந்நாட்களை மீட்டிப் பெறவே முடியாது. அதுதான் உலக வாழ்வு. அனைத்து விடயங்களுக்கும் ஓர் அளவு உண்டு. ஓர் எல்லை உண்டு. அதைத் தாண்டி மனிதன் செற்பட்டு விட முடியாது.

உலகில் அல்லாஹ்விடமிருந்து மனிதன் அனுபவிக்கும் அருட் கொடைகள் பலகோடி. மனிதனை அல்லாஹ் படைக்கின்றபோது பல அருள்களையும் சேர்த்துத்தான் படைத்திருக்கிறான். மனிதனாகப் பிறந்தது ஒரு அருள், அதிலும் முஸ்லிமாகப் பிறந்தது பெரிய அருள். தேக ஆரோக்கியத்தோடு படைக்கப் பட்டிருப்பது ஓர் அருள். கல்லூரி வாழ்வு ஓர் அருள். நல்ல நண்பர்கள் கிடைப்பதும் ஓர் அருள்தான்.

பணம் சம்பாதிக்க முன் மனிதர்களை சம்பாதிக்க வேண்டும் என்று பலரும் கூறுவதை நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். அதில் எத்தனை உண்மைகள் பொதிந்துள்ளன. நல்ல நண்பர்களை சம்பாதித்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கிய அல்லாஹ்வுக்கும் கல்லூரிக்கும் பலகோடி நன்றிகள். ஆட்சிக்கதிரை முதல் அடுப்பங்கரை வரை வழிகாட்டிய இஸ்லாம் நல்ல நண்பர்களைத் தேடும் விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தியிருக்கிறது. ''ஒருவர் தனது நண்பனின் மார்க்கத்தில் இருக்கிறான்'' என்ற நபிமொழி நண்பர்களைத் தேடும் விடயத்தில் மனிதன் எவ்வளவு அவதானமாக இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

வாழ்வில் எப்போதுமே மறக்க முடியாத கல்லூரி வாழ்வில் முதல்நாள் அனுபவம் மிகவும் இனிமையானது. புன்னகைகள்தான் எம் நட்பின் ஆரம்பம். ''புன்னகைத்துப் பாருங்கள் பட்டாம் பூச்சிகளாய் நண்பர்கள் உங்களைச் சுற்றிசி சிறகடிப்பார்கள்'' என்ற நண்பனொருவனின் வரிகளுக்கு அன்றே விளக்கம் கற்றுக் கொண்டேன். கல்லூரியின் முதல் நாள் பாடம், முதலில் கற்பித்த ஆசிரியர், முதல் நாள் உணவு, முதன்முதலில் கிடைத்த விடுமுறை, மனதுக்குப் பிடித்த கவி வரிகள் போல மறக்க முடிவதேயில்லை. பல பிரதேசங்களைச் சேர்ந்த நண்பர்கள், ஒவ்வொருவரின் மொழியிலும். சிறு சிறு வித்தியாசங்கள் கூட்டாகச் சேர்ந்து சிலரது மொழியை கேலி செய்த நினைவுகள்…

கல்லூரி நாட்கள் விரைவாக முடிந்துவிடும் என்று ஒருவர் சொன்னார். அனுபவித்துப்பார்த்தபோதுதான் அது உண்மை என்று புரிந்தது. இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஆசிரியர்கள் வாழ்க்கைக்கு வழி காட்டினார்கள். நட்புக்கு வரைவிலக்கணம் கற்றதும் அங்கு தான். ஏழை, பணக்காரன், ஊர்த்தோழன், அறை நண்பன் என்ற எல்லையைத் தாண்டி எல்லோருடனும் பழக முடிந்தது. ''எனது நண்பன் வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது. பணம் தேவைப்பட்டபோது உறவினர்கள் எல்லோரும் கைவிட்டுவிட்டனர். நண்பர்கள்தான் பணம் சேர்த்துக் கொடுத்தார்கள்'' என்று வகுப்புத் தோழனொருவன் சொன்ன போது நட்பின் பெறுமதியை உணர்ந்து கொண்டேன்.

வாரத்தில் ஒருமுறை விளையாடக் கிடைக்கின்ற சந்தர்ப்பம் பார்த்து எமது விளையாட்டைத் தடுப்பதற்கென்றே பெய்வது போல ஒரு கடுமையான மழை கொட்டும்போது மனதில் தோன்றும் கவலையை எழுத்துக்களால் கூறிவிட முடியாது. காலை நேர வகுப்பறை, மதியநேர வாசிகசாலை, மாலைநேர விளையாட்டு, இரவுநேர அரட்டைகள் என்றும் இனிமையானவை. தஃவா பற்றியும், எதிர்காலம் பற்றியும் கதைத்த இரவுகளும் என்றும் பசுமையானவை. அங்கு மனிதர்களை வாசிக்க முடிந்தது. புத்தகங்களோடு பழகக் கிடைத்தது. எம் கோணலான எழுத்துக்கள் சீர்பெற்றன. எம் பேச்சுக்கள்

வலிமை பெற்றன. உள்ளத்துக்கு தன்னம்பிக்கை கிடைத்தது. யா அல்லாஹ் எம் அறிவுப் பசிக்கு தீனி போட்ட எம் ஆசான்களுக்கும் எம் அறிவுத் தந்தைக்கும் மறுமையில் உயர்ந்த ஜன்னதுல் பிர்தௌஸை வழங்குவாயாக.

நண்பர்களின்றி வாழ்வோர் வெறும் பிணமாகத் தான் வாழ்வார்கள். சில விடயங்களை நண்பர்களோடு மாத்திரம்தான் பகிர்ந்துகொள்ள முடிகிறது. நண்பர்கள் சந்தோசத்தில் சேர்ந்து சிரிப்பதற்கும் வெற்றியின் போது சேர்ந்து கொண்டாடுவதற்கும் மட்டுமல்ல. துன்பத்திலும் கவலையிலும் சேர்ந்து அழுவதற்கும் தான். கீழே விழும்போது கைகொடுத்து தூக்கிவிடுவதற்கும்தான். உண்மையான நண்பர்கள் இன்பத்திலும், துன்பத்திலும் கூடவே இருப்பார்கள். எந்த நிழலுமில்லாத மறுமையில் அல்லாஹ் நிழல் வழங்குகின்ற ஏழு கூட்டத்தாரில் அல்லாஹ்வுக்காக சேர்ந்திருந்த இரண்டு நண்பர்களும் உள்ளடக்கப்படுவார்கள். நல்ல விடயங்களைப் பாராட்டக்கூடிய, தீய விடயங்களைச் செய்யும்போது தடுத்து நிறுத்தக்கூடிய நல்ல நண்பர்களையே தேடிக்கொள்ளும்படி இஸ்லாம் பணிக்கின்றது. சிறிய சண்டைகள்கூட கால நகர்வில் மறந்து போகின்றன.

காயங்களை, கவலைகளை நண்பர்களிடம் சொல்லும்போது அவர்கள் கூறுகின்ற ஆறுதலால் ஏதோவொரு சுமை குறைவது போன்ற உணர்வு ஏற்படுகிறது. சிலர் சுமையாகவும் அமைந்துவிடுகிறார்கள். இவர்களால் எந்தப் பயனுமில்லை. இன்ப துன்பங்களைக்கூட இவர்களோடு பகிர்ந்துகொள்ள முடியாது.

முதல் பாடம், முதலில் கற்பித்த ஆசிரியர், முதல் விடுமுறை என்று பேசிக்கொண்டதுபோலவே கல்லூரியின் விடுமுறை, கடைசிப்பாடம், கடைசி நாள் விளையாட்டு, கடைசித் தேனீர் என்று கதைக்கும் போதெல்லாம் தன்னையறியாமலேயே வெளியாகிய கண்ணீர்த் துளியை யாரும் காணாமல் துடைத்துக் கொண்ட ஞாபகம். கடைசிப் பரீட்சை முடிந்து துள்ளிக் குதித்து சந்தோசத்தைக் கொண்டாட வேண்டும் என்று எமக்குள் பேசிக் கொண்டோம். முடியவில்லை. இறுதிப் பரீட்சை முடிந்து மண்டபத்திலிருந்து கவலையுடனேயே திரும்ப முடிந்தது. கற்பித்த ஆசிரியர்கள், பழகிய சொந்தங்கள், அழகிய வாசிகசாலை, கடலைப் பார்த்துக் கொண்டே பயணிக்கும் ஜன்னலோர ரயில் எல்லாம் விட்டுப் பிரியப் போகின்றோம் என்ற கவலைதான் அதற்குக் காரணம்.

வழமையான விடுமுறைக்காக நாட்கள் எண்ணிப் பழக்கப்பட்டுப்போன எமக்கு கல்லூரி வாழ்வு முடிந்து வீடு செல்ல வேண்டிய நாட்களையும் எண்ண வேண்டி ஏற்பட்டது.

## நகைச்சுவைக்காக
# பொய் கூறுதல்

எங்களில் பலர் தமது பேச்சுக்களை ரசனையூட்ட பொய்களை சொல்லி அடுத்தவர்களை மகிழ்விப்பதைக் காண்கின்றோம். இஸ்லாம் பொய் பேசுவதை கடுமையாக கண்டிக்கிறது. நபி(ஸல்) அவர்கள் பொய்யை பேசுபவர்களுக்கு கடுமையான தண்டனை உள்ளது என எச்சரித்துள்ளார்கள்.

சில நேரங்களில் மனிதன் வேடிக்கையாக பேசும் இடங்களில் தம் பேச்சுக்கு ரசனையூட்ட சில பொய்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள். இதனை சொல்பவனோ, கேட்பவர்களோ தவறு என்று நினைப்பதில்லை. ஏனெனில், பேசுவது வேடிக்கை, இதில் தவறான தகவல்களைத் தருவதோ அல்லது கற்பனையான சம்பவங்களை சித்தரிப்பதோ என்ன தவறு என மனிதன் எண்ணுகின்றான்.

இஸ்லாம் வேடிக்கையாகப் பேசுவதையோ, சிரித்து மகிழ்வதையோ தடை செய்யவில்லை. ஆனால், வேடிக்கையும் சிரித்து மகிழ்வதிலும் உண்மை, நேர்மை இவற்றில் எல்லைகளோ இருக்க வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்; அடுத்தவர்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காக பொய்யான கதைகளைக் கூறுபவனுக்கு மரணம் உண்டாகட்டும், அவனுக்கு அழிவு காத்துக் கொண்டிருக்கின்றது. (திர்மிதி)

வேடிக்கையில் ஈடுபட வேண்டிய அவசியமிருந்தும் பொய்யை விட்டுவிலகி இருப்பவனுக்கு சுவர்க்கத்தின் நடுவில் ஒரு வீடு கிடைக்கும் என நான் உறுதி அளிக்கிறேன். (பைஹகி)

சில மணித்துளிகள் சிரித்து மகிழ வேண்டும் என்பதற்காக பல கட்டுக்கதைகளை புனைவதை காண்கிறோம். நிச்சயமாக இது பல விபரீதங்களை விளைவிப்பதாக உள்ளது. சிலநேரங்களில் பல குடும்பங்களில் பிளவுகளையும் ஏற்படுத்திவிடுவதுண்டு.

நாம் நபி (ஸல்) அவர்கள் வாக்களித்த சுவர்க்கத்தின் நடுவில் ஒரு வீட்டைப் பெற்றுக்கொள்ள முந்திக்கொள்ள வேண்டும்.

நத்ரா தாரின்
இஸ்லாஹிய்யா வளாகம்
புத்தளம்





# புதிய உறவு, புதிய வாழ்வு, புதிய சவால்

தினக்குறிப்பு எழுதும் வழக்கம் எப்போது ஆரம்பித்தது என்பது திட்டமாகத் தெரியவில்லை. ஹஸ்ரத் உமர் (றழி) அவர்கள் தன்னால் நிகழும் பாவங்களை தினக் குறிப்பாக எழுதி இரவில் அதற்கான தண்டனைகளை தானே நிறைவேற்றிக் கொண்டதாக வரலாறு உண்டு. இதிலிருந்தே 'முஹாஸபா' எனும் மரபு உருவானது எனலாம்.

மனிதன் தவறு செய்பவன்; அதே நேரத்தில் நல்லதையும் செய்பவன். இவற்றை எடை போடுவதற்கு, தன்னைத் தானே கணிப்பிட்டுக் கொள்வதற்கு, சீர்படுத்திக் கொள்வதற்கு 'முஹாஸபா' துணை செய்கிறது. இது தனிநபர் வாழ்வில் நிகழ்வதுபோலவே குடும்பவாழ்விலும் இடம்பெற வேண்டிய தேவையுண்டு.

ஏனெனில், குடும்பவாழ்வில் நுழையும் (கணவன், மனைவி ஆகிய) இருவரும் ஒருவருக்கொருவர் புதியவர்கள். பாலால், இயல்பூக்கத்தால் இலட்சியத்தை அடையும் வழிமுறையால், மற்றவரை அணுகும் பாவனையால் வேறுபட்டவர்கள். இவ்வேறுபாடுகளால் குறிப்பிட்ட காலம் கடக்கும் வரை ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வரை இணங்கிச் செல்வது சிரமமாக அமையலாம். இவ்வாறு இணங்கிச் செல்வதற்கு புரிந்துணர்வுடன் செயற்படுவதற்கு வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு காலக்கெடு தேவைப்படலாம். இந்நிலையில் காலக்கெடுவைக் குறைத்துக் கொள்வதற்கு தினக்குறிப்பு எழுதும் முறை பயனுள்ளதாக அமையும்.

ஆதலால், நான்கு குடும்பப் பெண்கள் தமது குடும்ப வாழ்வுடன் தொடர்பாக எழுதிய தினக்குறிப்புக்கள் இன்று உங்கள் முன் சமர்பிக்கப்படுகின்றன. இவற்றை அவதானித்து உங்கள் கருத்தை சுருக்கமாக முன்வையுங்கள்.

| | சகோ. சபானா | சகோ. சகீனா | சகோ. பாயிஸா |
|---|---|---|---|
| ஞாயிறு | ✱ முற்பகலில் சகோதரியின் வீட்டுக்குக் குடும்பமாகச் சென்றோம்.<br>✱ மாலையில் பிள்ளைகளோடு பூங்கா சென்றோம்.<br>✱ பத்திரிகையில் வெளிவந்த குடும்ப வாழ்வு தொடர்பான கட்டுரை ஒன்றைப் படித்து இருவரும் கலந்துரையாடினோம். | ✱ காலையில் இருவரும் சந்தைக்குச் சென்றோம்.<br>✱ பிற்பகலில் நிகழ்ந்த மகளிர் மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.<br>✱ இரவில் கூட்டம் பற்றி இருவரும் கலந்துரையாடினோம். | ✱ காலையில் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியான கலந்துரையாடல் இடம்பெற்றது.<br>✱ விஷேட உணவும் பரிமாறப் பட்டது.<br>✱ பின்னேரம் சகோதரியின் குடும்பப் பிரச்சினை ஒன்றை தீர்த்து வைப்பதற்காக அங்கு சென்று கலந்துரையாடினோம். |
| திங்கள் | ✱ காலைப்பொழுது இளைய மகளோடு சேர்ந்திருப்பதில் கழிகின்றது.<br>✱ மாலையில் நூல் வெளியீட்டு வைபவமொன்றில் கலந்து கொண்டேன்.<br>✱ இரவில் அந்த நூல் பற்றி இருவரும் கலந்துரையாடினோம். | ✱ சர்வதேச மகளிர் தொடர்பான ஒலிநாடா ஒன்றை செவிமடுத்தேன்.<br>✱ பின்னேரம் வீட்டுக்கு வந்த தோழியருடன் அது பற்றி கருத்துப் பரிமாறினேன். | ✱ மாதாந்த சஞ்சிகைக்கு சீதனக் கொடுமை பற்றி கவிதையொன்று எழுதினேன்.<br>✱ பின்னேரத்தில் சுகவீனமுற்றிருக்கும் பக்கத்துவீட்டு மூதாட்டியைப் பார்ப்பதற்காக இருவரும் சென்றோம். |
| செவ்வாய் | ✱ இளைய மகளோடு காலைப் பொழுது கழிந்தது.<br>✱ பிற்பகலில் மூத்தவன் படிப்பதற்கு உதவி செய்தேன்.<br>✱ இரவில் சமூகவிவகாரம் பற்றி இருவரும் கலந்துரையாடினோம். | ✱ குழந்தை சுகவீனமுற்றதால் மருத்துவரிடம் சென்றேன்.<br>✱ குழந்தை வளர்ப்பு தொடர்பாக கணவர் நல்ல கருத்துக்களை சொல்லித் தந்தார். | ✱ மகனின் ஆக்கமொன்று சிறுவர் சஞ்சிகையில் வெளியாகியுள்ளது.<br>✱ மகனைப் பாராட்டி பரிசும் வழங்கினேன்.<br>✱ பின்னேரம் மகனுடன் சந்தைக்குச் சென்றேன். |



| | | | |
|---|---|---|---|
| புதன் | ✸ அடுத்த வீட்டு மூத்தம்மாவுடன் கலந்துரையாடினேன். பிள்ளை வளர்ப்பு பற்றி நிறைய கற்றுக் கொண்டேன்.<br>✸ இரவில் மூத்தம்மாவின் கருத்துக்கள் பற்றி கணவனுடன் கலந்துரையாடினேன். | ✸ சுகவீனமுற்ற குழந்தையைப் பார்க்க உறவினர் பலர் வீட்டுக்கு வந்தனர்.<br>✸ உறவினர் பரிமாறிய கருத்துக்களை கணவனிடம் முன் வைத்து கலந்துரையாடினோம். | ✸ சூடு பிடித்துள்ள அரசியல் விவகாரம் பற்றி கணவனுடன் கலந்துரையாடினேன்.<br>✸ அது தொடர்பான பத்திரிகைச் செய்திகளை வெட்டிச் சேகரித்தேன். |
| வியாழன் | ✸ கணவனுடன் சேர்ந்து அல்குர்ஆனை மனனம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டேன்.<br>✸ பின்னிரவில் 'கியாமுல் லைல்' இடம்பெற்றது. | ✸ மஃரிபுக்கும் இஷாவுக்குமிடையில் திக்ர், திலாவத், துஆ என்பவற்றில் ஈடுபட்டோம்.<br>✸ ஆன்மீக வறுமை எனும் நூலை வாசித்து கருத்துப் பரிமாறினோம். | ✸ குடும்பமாக அமர்ந்து தப்ஸீர் வாசித்தோம். தேவையான விளக்கங்களை கருத்துப் பரிமாறி பெற்றுக் கொண்டோம். |
| வெள்ளி | ✸ பலஸ்தீன் விவகாரம் பற்றிய கட்டுரை ஒன்றை வாசித்தேன்.<br>✸ இரவில் கணவனுடன் கருத்துப் பரிமாறி மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொண்டேன். | ✸ பிரசித்த ஆலிம்கள் சிலரின் மரணச் செய்திகள் கிடைத்தன. ஆலிம்களின் வபாத் பற்றிய கருத்துக்களை இருவரும் பரிமாறிக் கொண்டோம்.<br>✸ பெற்றோர் வீட்டுக்கு வந்தனர். அவர்களுடன் கடற்கரைக்குச் சென்றோம். | ✸ வாராந்த தர்பியா நிகழ்வில் கலந்து கொண்டேன்.<br>✸ பாடசாலை கைப்பணி கண்காட்சியில் மகளுக்கு பரிசு கிடைத்துள்ளது. பாராட்டி மகிழ்ந்தோம். |
| சனி | ✸ பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டோம்.<br>✸ பின்னேரம் பூங்காவுக்குச் சென்றோம். | ✸ புத்தகம் பெறுவதற்காக நூலகம் சென்றோம்.<br>✸ இறுவட்டில் சிறுவர் தொடர்பான படமொன்றை (துர்ரா) பார்த்தோம். | ✸ உதைப் பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட மகனை உற்சாகப்படுத்த மைதானம் சென்றோம். |

### மாணவியர் கருத்து

- ★ கணவன் மனைவியரிடையே நல்லுறவு காணப் படுகிறது. தவறாமல் கருத்துப் பரிமாற்றம் இடம் பெற்றிருக்கிறது.
- ★ அயலார் உறவினரிடம் நட்புறவு காணப்படுகிறது. போவதும் வருவதுமாக நிகழ்வுகள் காணப்படுகின் றன.
- ★ ஆன்மீக வளர்ச்சியில் அக்கறை செலுத்துகிறார்கள். வியாழன் இரவு அதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளதா கத் தெரிகின்றது.
- ★ குடும்ப சமூக விவகாரங்களில் அக்கறை செலுத்துகி றார்கள். அவை தொடர்பாகப் படிக்கிறார்கள்; கருத் துப் பரிமாறுகிறார்கள்.
- ★ பிள்ளை வளர்ப்பில் கவனக்குவிப்பு இடம்பெற்றிருக் கிறது.
- ★ அறிவு விருத்திக்காக நேரம் ஒதுக்கியிருக்கிறார்கள்.
- ★ வாரத்தில் ஒரு நாளாவது பொழுது போக்கிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- ★ சில விடயங்களில் ஒரே மாதிரியாகவும் வேறு சில விடயங்களில் வித்தியாசமாகவும் செயல்பட்டிருக்கி றார்கள்.

### ஆசிரியர் கருத்து

உங்கள் அவதானிப்புக்கள் பாராட்டத்தக்கவை. எனி னும், சில விடயங்கள் யதார்த்தபூர்வமாக நோக்கப்பட வேண்டும். குடும்ப வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருபவை. நாளாந்த செயற்பாடுகள் பல தவறிவிடப்பட்டிருக்கின்றன. சகோதரி பாயிஸாவின் குடும்பத்தில் மகிழ்வான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

மூன்று சகோதரிகளும் ஓரளவு கற்றவர்களாக இருக்கி றார்கள். அவர்களின் கணவன்மார் பகல் முழுவதும் தொழில் செய்பவர்களாகத் தெரிகின்றார்கள். இருந்தா லும் இராவேளையிலும், வார இறுதி நாட்களிலும் குடும்பத்தோடு-மனைவி மக்களோடு சேர்ந்து பழகி குடும்பத்தை சீராக நடத்த முயற்சிக்கின்றார்கள். இவர் களுக்கு மனைவியரின் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. உறவினரின் ஒத்துழைப்பும் கிடைக்கின்றது.

இம்மூவரின் குடும்ப வாழ்விலும் ஒரு வார காலத் தில் எந்த ஊடலும் இடம்பெறவில்லை. இவர்கள் படித் தவர்களாக, புரிந்துணர்வுடன் நடந்து கொள்பவர்களாக, திட்டமிட்டு செயல்படுபவர்களாக இருப்பதால் அவ்வாறு நிகழவில்லை போலும். இதனை வேறு விதமாகவும் கருதுவதற்கு இடமுண்டு. குடும்ப வாழ்வின் மோசமான பகுதிகள் எழுதப்படக்கூடாது; மறைக்கப்பட வேண்டும் என்ற வெட்க உணர்வு தினக்குறிப்பில் அவற்றை எழுத விடாமல் தவிர்த்திருக்கலாம். ஆனால், அவற்றையும் எழுதி அந்தச் சிக்கல்கள்-சிக்கிய, அவிழ்ந்த முறைகள் எழுதப்பட்டால் அவை தொடராமல் பாதுகாக்கலாம். மற்றவர்களுக்கும் பயன்படலாம்.

நன்றி; மற்றொரு வகுப்பில் சந்திப்போம்

## உபதேசம் செய்தல்

முஆவியா இப்னு ஹகம் அஸ்ஸலமி (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; ''நான் றஸூலுல்லாஹ் வுடன் தொழுதுகொண்டிருந்தபோது அங்கிருந்த ஒருவர் தும்மிவிட்டார். உடனே நான் யர்ஹமகல்லாஹ் என்று சொன்னேன். உடனே அனைவரும் என்னைப் பார்த்தார்கள். உடனே நான் சொன்னேன், உங்க ளுக்கு என்ன நடந்தது? ஏன் என்னைப் பார்க்கிறீர்கள்? உடனே அவர்கள் தங்கள் தொடைகளில் கைக ளைத் தட்டிக் கொண்டார்கள். என்னை அமைதியாக இருக்க இவ்வாறு செய்கிறார்கள் என்று நினைத்து நான் அமைதியானேன். எனது தாயும், தந்தையும் ரஸூலுல்லாஹ்விற்கு அர்ப்பணமாகட்டும், நபி (ஸல்) அவர்களைப் போன்று சிறந்ததொரு ஆசிரியரை இதற்கு முன்னரோ பின்னரோ கண்டதில்லை.

நபியவர்கள் தொழுது முடிந்ததும் என்னைக் கடிந்துகொள்ளவோ, தூற்றவோ இல்லை. அவர்கள் சொன் னார்கள்; நிச்சயமாக தொழுகையிலே பேசுவது கூடாது. நிச்சயமாக தொழுகை என்பது தஸ்பீஹும், தக்பீரும், குர்ஆன் ஓதுவதுமே. பின்னர் நான் சொன்னேன் ரஸூலுல்லாஹ்வே நான் ஜாஹிலிய்ய சூழலி லிருந்து இஸ்லாத்திற்கு புதிதாக வந்தவன். அல்லாஹ் இஸ்லாத்தைக் கொண்டு வந்து தந்தான். எங்களில் சிலர் சோதிடம் பார்ப்பவர்களிடம் செல்கிறார்கள். இதற்கு நபியவர்கள் ''நீ அவர்களிடம் செல்ல வேண் டாம்'' என்றார்கள். பிறகு நான் ''இன்னும் சிலர் சகுணம் பார்க்கிறார்கள்'' என்றேன். அதற்கு ''அவர்களது உள்ளத்தில் அவர்கள் காணும் விடயம். அது அவர்களை (அவர்களது விதியை விட்டும்) தடுக்காது'' என்றார்கள். (முஸ்லிம்)

எனவே, நாமும் உபதேசிக்கும் போது அதை சுருக்கமாகவும் அழகானமுறையிலும் செய்யக் கூடியவர்க ளாக இருக்க வேண்டும்.

சுமையா ரிபாய்

ஹாதிய்யா இஸ்லாமிய நிறுவனம்

# நாளைகளை நம்ப வேண்டாம்

ஃபர்ஹத் ஹானிம்

''நாளைக்குப் பார்க்கலாம்''

''பிறகு செய்துகொள்ளலாம் தானே''

''நாளைவரைக்கும் நேரம் இருக்கிறதுதானே''

நாம் அடிக்கடி செவியேற்கும், அடிக்கடி உபயோகிக்கும் வார்த்தைகள்தான் இவை.

நாளைக்கென வேலைகளைத் தள்ளிப்போடுதல் அது நடைபெறாது என்பதற்கு அர்த்தமாகும். நாம் தள்ளிப்போடும் நாளையானது நாளை மறுநாளாகி, அதுவும் மறுநாளாகி... நாளைகள் தொடரும். வேலைகள் அப்படியே கிடப்பில் கிடக்கும். எம் ஒவ்வொருவரின் வாழ்விலும் இந்த உண்மையை அனுபவத்தில் உணர்ந்திருப்போம்.

நாட்கள் நகர நகர தலையினுள் ஏதோவொரு பாரமொன்றை சுமப்பதான வலியேற்படும். மனதிலும் சுமைகள் கூடும். வலிகளின் அத்தனை விம்பங்களும் துரத்தி வருவதான பிரம்மையேற்படும். இறுதியில் தூக்கம் கெட்டு, கனவுகள் துரத்தும்.

நாளைகளுக்காய் தள்ளிப் போடுதல் இருக்கின்ற வேலைகளையும் செய்ய முடியாதபடி தடுத்து விடுகிறது. நாளாக நாளாக சோலிகளும் கூடிக்கொண்டே போகிறது. எனவேதான், ''இன்றே செய் இப்பேதே செய்'' என்ற வாய்ப்பாட்டை அன்றாட வாழ்வில் கடைப்பிடிப்பது அவசியமாகிறது.

''ஐந்து விடயங்கள் வருவதற்கு முன் ஐந்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். முதுமைக்கு முன்னரான இளமை, நோய்க்கு முன்னரான ஆரோக்கியம், வறுமைக்கு முன்னரான செல்வம், சோலிகளுக்கு முன்னரான ஓய்வு, மரணத்திற்கு முன்னரான உலக வாழ்வு'' (திர்மிதி)

நேரம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. காலம் அதன்பாட்டில் போய்க் கொண்டிருக்கிறது. மனிதனைச் சூழ்ந்திருக்கும் வேலைப்பளுக்களுக்கிடையே அந்தந்த விடயங்களை அவ்வப்போதே செய்வதென்பது சவால் மிக்கதுதான். இருப்பினும் நாளைகளுக்காய் பிற்போடுவது நல்லதல்ல.

மேற்சொன்ன நபிமொழி நமக்குச் சொல்லும் பாடம் சிந்திக்கத்தக்கது. இருக்கின்ற சந்தர்ப்பங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரிய சந்தர்ப்பங்கள் எப்போதும் எம்மைத் தேடி வருவதில்லை. எனவே, சோலிகள் ஏற்பட முன்னர் ஓய்வுநேரங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சோலிகள் வந்துவிட்டால் நிறைவேற்றப்படாத வேலைகளை செய்து முடிப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.


இன்றையதை இன்றே செய்து முடிக்கும்போது மனது தெளிந்த நீரோடையாகிறது. தலையினுள் சூழ்ந்திருக்கும் புகைமூட்டம் மெல்ல மெல்ல விலகுகிறது. மனசுக்குள் மண்டியிட்டுக் கிடக்கும் இருள் நீங்குகிறது.

நாளை எனும் பிற்போடுதலை குழிதோண்டிப் புதைப்போம். இன்றே செய்து முடிப்போம் எனும் உறுதியை உள்ளத்திலேயே ஊன்றி விதைப்போம்.

நாளைகளை நம்ப வேண்டாம். ஏனெனில், அது நம் கையில் இல்லை.

# வாசிப்போம் சிந்திப்போம்

நபி (ஸல்) அவர்களுக்கு 'வாசிப்பீராக' என்பதே அல்குர்ஆனின் முதல் வஹியாக இறங்கியது. ஆனால், இன்று அதிகமானோர் வாசிப்பை விரும்பு வதில்லை. அவர்களுக்கு வாசிப்பது ஒரு சுமையாகத் தெரிகிறது. வாசிப்பதன் மூலமே முன்னேற முடியும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற னர். எனவே, வாசிப்பை விருப்பத்திற்குரிய பொழுது போக்காக மாற்றிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் வாழ்க்கையில் பல சாதனைகளை நிலை நாட்ட முடியும். ஒரு மனிதன் இஸ்லாத்தை தெளிவாக விளங்க வேண்டுமென்றால் வாசிப்பு அவனுக்கு சிறந்த சாதனமாகும்.



அறிவுடையவர்கள் அல்லாஹ்வின் படைப்புகள் குறித்து சிந்திப்பார்கள் என்று அல்குர்ஆன் குறிப்பிடு கிறது. எனவே, அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றி நாம் வாசித்தும், அறிந்தும் அவைபற்றி சிந்திக்கக் கூடியவர்களாக மாற வேண்டும். இதனூடாக எமது சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள முடியும். சிந்தனை என்பது கண்ணாடி போன்றது. ஹஸனுல் பஸரி (றஹ்) அவர்கள்; ''ஒரு மணி நேரம் சிந்தனை செய்வது ஓரிரவு முழுவதும் நின்று வணங்குவதை விடச் சிறந்ததாகும்.'' மற்றோர் இடத்தில் ''சிந்தனை ஒரு கண்ணாடி, அது நன்மைகளை யும் தீமைகளை யும் உனக்குத் தெளிவாகக் காட்டும்'' என்றார்கள்.

**வாசிப்பில் நேசத்தை ஏற்படுத்துவதற்கான சில ஆலோசனைகள்:**

★ அல்லாஹ்வுக்காக என்ற நிய்யத்தை வைத்துக் கொள்ளல்.

★ அல்லாஹ்வின் அருளை வேண்டுதல்.

★ வாசிப்பின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளு தல்.

★ கண்களையும் சிந்தனையையும் அதிலே செலுத் துதல்.

★ உள்ளம் விரும்பியவற்றை வாசித்தல்.

★ வாசிப்பதற்குப் பொருத்தமான இடத்தையும் நேரத்தையும் தெரிவு செய்துகொள்ளல்.

★ வாசித்தவற்றைக் குறிப்பெடுத்துக் கொள்ளல்.

★ வாசிக்கும்போது இடையில் நிறுத்தி அவை பற்றி சிந்தித்தல்.

★ வாசித்தவற்றை அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளல்.

★ வாசித்தவற்றை வாழ்க்கையில் படிப்படியாக எடுத்து நடத்தல்.

நஸ்மியா ஸகரிய்யா
ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்
குரீகொட்டுவ

# உனக்காக அழுகிறேன்...

இன்ஸாப் ஸலாஹுதீன்

இருந்தாலும்... இருந்தாலும்... என்று சொல்லிப் பாருங்கள். உங்களாலும் அழாமல் இருக்க முடியாது என்று ஒருமுறை வாசித்தது நினைவில் இருக்கிறது. உண்மைதான், சொல்லிப் பார்த்தால் அழாமல் இருக்க முடியாது. அந்த ஒற்றை வரியின் முடிவில் உள்ள மௌனம் அதற்கு முன்னால் உள்ள ஏராள மான வார்த்தைகளை, நிகழ்வுகளை உள்ளடக்கியிருக் கின்றது.

'நீ மிகத் தூய்மையானவன், நீ எங்களுக்குக் கற்றுத் தந்தவற்றைத் தவிர எதைப் பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை' என்று சொல்லி மலக்குகள் மண்டி யிட்ட போதே மனிதன் மகத்துவம் பெற்றுவிட் டான். அந்த நீல நிற வானவெளியும் பரந்து விரிந்த பூமியும் மனிதனுக்காகத்தான் படைக்கப்பட்டுள் ளன. எவ்வளவு மகத்தான ஏற்பாடுகளோடு அல் லாஹ் மனிதனை இந்த உலகில் வாழவைத்திருக்கின் றான்!

இந்த வாழ்க்கைக்கான மிகச் சரியான அர்த்தத்தை நாம் எழுதிக் கொண்டிருக்கிறோமா அல்லது கிறுக் கிக் கொண்டிருக்கின்றோமா என்று எண்ணத் தோன்று கிறது. வாழ்க்கைப் பாதை எம்மில் அநேகருக்கு கிறுக்கலாகத்தான் காட்சி தருகின்றது.

எத்தனையோ ஆயிரம் மனிதர்கள் இந்தப் பூமி யில் வாழ்ந்து இறந்து போயிருக்கின்றார்கள்... வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்... இன்னும் வாழ் வார்கள்... இறப்பார்கள்... ஆனால், மிகச்சிலர் தான் வாழ்வின் சரியான அர்த்தத்தை அடைந்து கொள்கி றார்கள்.

மேல் மாடிகளில் இருந்து மாநகர வீதிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது எறும்புக் கூட்டங் கள் போல வாகனங்கள் சென்றுகொண்டிருக்கும். அவற்றின் நகர்வுகளில் வாழ்க்கையும் நகர்வது தெரி யும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பயணங்கள். பாதைகள் முடிந்தாலும் இந்த உலகில் பயணங்கள் முடிவதில்லை போலிருக்கிறது.

தன் வாழ்வில் ஆயிரம் சோலிகளை மனிதன் தன் தலைக்குள் வைத்துக் கொண்டுதான் அலைகிறான். அவைகளை முடித்துவிட்டு யாரும் மரணிப்பதில்லை. தன் வாழ்க்கையின் பாதி அலைச்சலை வைத்து விட்டுத்தான் மனிதன் இறந்து போகிறான்.

தனக்கு எல்லா வசதிகளும் கைகூடி வந்ததன் பிறகு மிகச் சிறந்ததொரு வாழ்க்கையை வாழலாம். இறைவனை திருப்திப்படுத்தலாம் என்றுதான் மனி தன் நினைத்துக் கொண்டிருக்கிறான். அப்படி வாழ எவருக்கும் இந்த உலகில் வாழ்க்கை எஞ்சுவ தில்லை. சொல்லி முடியும்போது வார்த்தை முடிந்து போவது போலத்தான் வாழ்க்கையும். அன்றாட வாழ்க்கையோடு சேர்ந்துதான் எல்லாம் சாத்தியமாக வேண்டியிருக்கின்றது.

தனக்குத் துக்கம் நிகழும் போது மட்டும்தான் மனிதன் இறைவனை நினைக்கிறான், அழுகிறான். அப்போதுதான் தன்னைப் படைத்தவனை அவன் உண்மையாக நெருங்குகின்றான். மாறாக, அவன் மகிழ்ச்சியாக இருக்கும்போது அவனை மறந்து தன் சந்தோசச் சாளரங்களைத் திறந்து கொண்டிருக்கி றான்.

அதனால்தான் என்னவோ இறைவனை மனிதன் மறக்கக் கூடாது என்பதற்காக எல்லோரிலும் அவன் ஏதோ ஒரு குறையை வைத்திருக்கிறான். இல்லை யென்றால் இந்த உலகில் மனிதர்கள் கடவுளையே மறந்துவிடுவார்கள்.

மகிழ்ச்சி, துக்கம் என இரண்டிலும் நினைவுக்கு வர வேண்டியது படைத்த இறைவன்தான். அவன் நினைவில் அமிழ்வதும், அழிவதும் ஒன்றுதான். எல்லா உறவுகளை விடவும் நெருக்கமாக இருப்பது நித்திய அல்லாஹ்வின் உறவு மட்டும்தான். ஏனைய எல்லா உறவுகளும் விலகக் கூடியது, முறியக் கூடியது.

எல்லோருமே அவனுடனான உறவில் இடைவெளிகளை விட்டுத்தான் இருக்கின்றோம். நிறைவான அவனது அன்பைப் புறக்கணித்துவிட்டு யாரிடமோ அன்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.

மனித உறவுகளின்போது நாம் எல்லோருமே எமது நன்றிகளை சக மனிதர்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். எமக்கு உதவியவர்களை பக்குவமாய் நினைவில் வைத்துக் கொள்கிறோம். பிரதியீடுகளை வழங்குகிறோம். பரஸ்பரம் நேசம் வைக்கிறோம்.

ஆனால், மலக்குமார்களை எமக்கு சிரம்பணிய வைத்து எம்மை கௌரவப்படுத்தியவனை மறந்துவிட்டு நிற்கிறோம். அவன் எத்தனை அருள்களை நிஃமத்துக்களை எமக்கு நிரப்பமாகத் தந்திருக்கிறான்! வைத்தியசாலைகளுக்குச் சென்று பார்க்கும்போதுதான் மனிதனுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள நிஃமத்துக்களை நாம் நினைத்துப் பார்க்கிறோம். அப்போதுதான் நம் ஈமானை நாம் முதன்முறையாகத் தொட்டு பார்க்கிறோம்.

**தனக்கு எல்லா வசதிகளும் கை கூடி வந்ததன் பிறகு மிகச் சிறந்ததொரு வாழ்க்கையை வாழலாம். இறைவனை திருப்திப்படுத்தலாம் என்றுதான் மனிதனை நினைத்துக் கொண்டிருக்கிறான். அப்படி வாழ எவருக்கும் இந்த உலகில் வாழ்க்கை எஞ்சுவதில்லை.**

அது கனக்கும்போது நாம் உண்மையாக அழுகிறோம். எத்தனை வகையான நோய்களிலிருந்து அவன் எம்மை பாதுகாத்திருக்கிறான். இறைவனே! உனக்கே புகழ் எல்லாம்!




மனிதனுக்கு இறைவன் வழங்கியிருக்கும் அருளும் அவன்மீது காட்டும் அன்பும் எவ்வளவு விசாலமானது. வானைக் கூட சிலவேளை அளந்து முடித்தாலும் அவன் அன்பை எம்மால் அளவிட முடியாது போகும்.

தன் எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்ட இறை தூதர் (ஸல்) அவர்களே கால்கள் வீங்கும் வரை நின்று வணங்கி தன் நன்றியை இறைவனுக்குத் தெரிவித்தார்கள். நான் நன்றியுள்ள அடியானாக இருக்கக் கூடாதா?! என்றுதான் ஆயிஷாவின் கேள்விக்குப் பதில் தந்தார்கள். பாவங்கள் நிறைந்த நாமோ அவனுக்காக ஒருதுளிக் கண்ணீரையாவது சிந்தாமல் இருக்கின்றோம். அவன் தன் அடியார்களுக்காக கீழ் வானத்தில் வந்து காத்துக் கொண்டிருக்கும்போது நாம் அவனிடம் செல்லாமல் இருக்கின்றோம்.

யாரோவாகிப் போனவர்களின் அழைப்புக்கெல்லாம் பதில் அளிக்கின்றோம், யாருக்காகவெல்லாமோ அழுகின்றோம். அந்த அல்லாஹ்வுக்காக அழாமல் இருக்கின்றோம்.

இறைவா! உனக்கு மாறு செய்தபோதும் உன் அன்பை நீ நிறுத்துவதில்லை. உன் நிஃமத்துக்களை துண்டிப்பதில்லை... அருளை இந்தப் பூமிக்கு அனுப்பாமல் விட்டதில்லை... நம் ஒவ்வொருவரின் ஆயுள் பாதையிலும் உன் அருள்கள் கொட்டிக் கிடக்கின்றன இருந்தாலும்... இருந்தாலும்...





# சமுதாய உருவாக்கத்தில் அல்குர்ஆனின் பங்கு

எம்.எச்.எம். நாஸிர்

## தனிநபர் உருவாக்கம்

தனிநபர்களின் கூட்டே சமுதாயம் என்பர். இது ஓர் எளிமையான வரைவிலக்கணமாகும். தனிநபர் இன்றி சமுதாயமில்லை. சமுதாயமின்றி தனிநபர் இல்லை. இது மற்றொரு கூற்றாகும். இவை தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்குமிடையிலான ஒட்டுறவை எடுத்துக் காட்டுகின்றன. எந்தச் சமுதாயம் தன்னைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டுமென விரும்புகிறதோ அந்தச் சமுதாயம் அதன் தனிநபர்களை சீர்த்திருத்தும் முயற்சியில் அல்லது பக்குவமாக வளர்த்துவிடும் பணி யில் ஈடுபட வேண்டிய தேவை உண்டு. ஏனெனில், சமூக தீங்குகள் தனிநபர்கள் மூலமே உருவாகின்றன. தனித்த ஆட்டையே ஓநாய் தின்றுவிடும் என்பதற்கேற்ப ஷைத்தான் தனிநபர்களுக்கூடாகவே தனது கணைகளை ஏவுகிறான்.

இஸ்லாம் அறிமுகமான காலகட்டம் அய்யாமுல் ஜாஹிலிய்யா எனப்படுகிறது. அறபு நாட்டில் மட்டுமன்றி முழு உலகிலும் ஜாஹிலிய்யா சமூகமே இயங்கிக் கொண்டிருந்தது. இந்நிலையில் அறபு நாட்டில் பிறந்து வளர்ந்த நபி (ஸல்) அவர்கள் ஜாஹிலிய்யா சமூகத்தில்தான் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். ஆனால், ஜாஹிலிய்யப் பண்புகள் அவர்களில் தொற்றிவிடாது அல்லாஹ் காப்பாற்றி வந்தான் என்பதற்கு நிறைய சம்பவங்கள் உள்ளன. எனவே, இளமை முதல் நுபுவ்வத் கிடைக்கும் வரையிலான காலகட்டத்தில் ஜாஹிலிய்யத்தை வெறுத்த, ஒதுங்கிவாழ்ந்த சில தனிநபர்களோடு அவர்களை சேர்த்து வைத்தான். அவர்கள்தான், நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் போதித்தபோது முதல் அணியில் சேர்ந்துகொண்டார்கள்.

அந்த முதல் அணியில் சேர்ந்திருந்த கதீஜா (றழி), அபூபக்ர் (றழி), ஸெய்த் (றழி), அலி (றழி), உஸ்மான் (றழி), தல்ஹா (றழி), ஸுபைர் (றழி), ஹம்ஸா (றழி), அப்துர் றஹ்மான் (றழி), அர்கம் (றழி) போன்றோர் முஸ்லிம் சமுதாயத்தின் முன்னணி உறுப்பினர்களாக-தனிநபர்களாக அமைந்தார்கள். இஸ்லாம் என்ற கட்டிடத்தின் அடித்தளமாக-மூலக் கற்களாக மாறினார்கள். இவர்களில் சிலர் கணவன் முஸ்லிம், மனைவி காபிராகவும், மனைவி முஸ்லிம் கணவன் காபிராகவும், தாய் முஸ்லிம் மகள் காபிராகவும், தாய் காபிர் மகள் முஸ்லிமாகவும், தந்தை முஸ்லிம் மகன் காபிராகவும், மகன் முஸ்லிம் தந்தை காபிராகவும் இருந்த நிலையை அவதானிக்கும்போது அன்று தனிநபர்களே முதலில் உருவாக்கப்பட்டனர் என்பதை விளங்கலாம்.

உதாரணமாக ஜர்ராஹ் காபிராகவும் அவரது மகன் அபூ உபைதா முஸ்லிமாகவும் இருக்கிறார். அபூதாலிப் காபிராக இருக்க அவரது மகன் அலி முஸ்லிமாக இருக்கிறார். அஸ்மா முஸ்லிமாக இருக்க அவரது தாய் காபிராக இருக்கிறார். ஸைனப் முஸ்லிமாக இருக்க அவரது கணவர் அபுல் ஆஸ் காபிராக இருக்கிறார்.

'ஸாபிகூன் அவ்வலூன்' எனப்பட்ட இந்தத் தனிநபர்கள் இஸ்லாத்தின் பக்கம் திரும்பியதற்கு நல்ல நட்பும், சகவாசமும், உளத்தூய்மையும், மனிதாபிமானமும் காரணமாக அமைந்தன எனலாம். அவர்கள் தமது சுற்றாடலில் நிகழ்ந்து கொண்டிருந்த தவறுகளை இனங்கண்டார்கள். அவற்றிலிருந்து தாமும் விலகி மற்றவர்களையும் விடுவிப்பதற்காக வழி தேடினார்கள். இக்காலகட்டத்தில் ஹுனபாக்களாக தம்மை அழைத்துக் கொண்டு செயற்பட்டவர்களின் நிலைப்பாடு இதனை எடுத்துக்

காட்டுகின்றது. நபி (ஸல்) அவர்களின் ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை, குறைஷித் தலைவர்கள் ஸஹாபாக்களின் நடவடிக்கைகளாகவே மதிப்பிட்டார்கள்.

இந்தத் தனிநபர்களை நபி (ஸல்) அவர்கள் தாருல் அர்கமில் அமர்த்தி அல்குர் ஆனின் போதனைகளுக்கூடாக பயிற்றுவித்தார்கள். ஸூறா முஸம்மிலின் கடைசி வசனம் (73:20) இதனை எடுத்துக் காட்டுகின்றது. இக்காலக்கட்டத்தில் தௌஹீத், றிஸாலத், மஆத் என்ற இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளை எடுத்துக் காட்டி தாம் யார் என்பதனை விளங்க வைத்தார்கள். அவர்களின் உள்ளங்களைத் தூய்மைப் படுத்தினார்கள். நடத்தைகளை சீர்மைப்படுத்தினார்கள்.

இதனைத்தான் எழுத்தறிவில்லாத மக்களுக்காக அவர்களிலேயே ஒரு தூதரை (தேர்ந்தெடுத்து) அவன் அனுப்பி வைத்தான். அவர்கள் இதற்கு முன்னர் பகிரங்க மான வழிகேட்டில் இருந்த போதும் அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பித்து அவர்களைப் பரிசுத்தமாக்கி வைத்து அவர்களுக்கு வேதத்தையும் ஞானத் தையும் கற்றுக் கொடுக்கிறார். (62:2) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.



ஸூறதுல் பாத்திஹா, தனிநபர் உருவாக்கப்பட்டு வந்த கால கட்டத்திலேயே அருளப் பட்டது. அதன் முதல் இரண்டு வசனங்களும் அல்லாஹ்வை அறி முகப்படுத்தின. றப்புல் ஆலமீன் (அகிலங்களின் இரட்சகன்), அர்ரஹ் மான் (அருளாளன்), அர்ரஹீம் (அன்புடை யவன்) என்று எடுத்துக் காட்டியதோடு மூன்றாவது வசனம் மாலிகி யவ்மித்தீன் (தீர்ப்பு நாளின் அதிபதி) என்று அல்லாஹ்வை மறுமைநாளுடன் இணைத்து அறிமுகப்படுத்துகின்றது.

உன்னையே வணங்குகின்றோம்; உன்னிடமே உதவி தேடுகின்றோம் என்ற தொடர் அல்லாஹ்வை வணக்கத்திற்குரியவனாக அடையாளப்படுத்துவதோடு, மனிதன் அல்லாஹ்வின் அடிமை என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. எங்களை நேரான வழியில் நடத்துவாயாக என்பது, பிரார்த்திப்பதற்கு அவனே தகுதியானவன், அவனிடமே கேட்க வேண்டும் என்பதை உணர்த்தியதோடு இஸ்லாம் ஒரு தனியான வாழ்க்கை முறை என்பதையும் எடுத்துக் கட்டியது.

அடுத்த தொடர் நேரான வழி, முரண் வழி என இருவழிகள் இருப்பதையும் நேரான வழியையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதையும் விளங்கிக் கொள்ள வழிகாட்டுகின்றது. சுருக்கமாக சொல்வதாயின் ஸூறதுல் பாத்திஹா அல்லாஹ்வுக்கும் தனி நபருக்குமிடையிலான இறுக்கமான தொடர்பைத் தெளிவுபடுத்தி தனிநபர் உருவாக்கத்தில் மிகுந்த கரிசனை காட்டுகிறது எனக் குறிப்பிடலாம்.

தௌஹீத் பற்றிய இறுக்கமான விளக்கத்தை ஸூறா இஹ்லாஸ் கற்றுக் கொடுத்தது. ''கூறுக; அல்லாஹ் ஒருவன் (தனித்தவன்) அவன் தேவையற்றவன், அவன் யாரையும் பெறவுமில்லை; யாராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு நிகராக எதுவும் (எவரும்) இல்லை.''

அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டுமென்பதை ஸூறா காபிரூன் கற்றுக் கொடுத்தது. ''கூறுக; நிராகரிப்போரே! நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்க மாட்டேன். நான் வணங்குபவனை நீங்கள் வணங்கவில்லை. இனியும் நீங்கள் வணங்கு பவற்றை நான் வணங்கமாட்டேன். நான் வணங்குபவனை இனி நீங்கள் வணங்க மாட்டீர்கள். உங்களுடைய மார்க்கம் உங்களுக்கும் எனது மார்க்கம் எனக்குமாகும்.

**இந்தத் தனிநபர்கள் இஸ்லாத்தின் பக்கம் திரும்பியதற்கு நல்ல நட்பும், சகவாசமும், உளத்தூய்மையும், மனிதாபிமானமும் காரணமாக அமைந்தன எனலாம். அவர்கள் தமது சுற்றாடலில் நிகழ்ந்து கொண்டிருந்த தவறுகளை இனங்கண்டார்கள்.**

தொடர்ந்து தனிநபரை உருவாக்கும் பணியில் அல்லாஹ்வுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்பை அல்லது மனிதன் அல்லாஹ்வுக்கு எத்துனை அளவு கடமைப் பட்டுள்ளான் என்பதை அல்லாஹ் அருளியுள்ள நிஃமத்துக்களை எடுத்துக் காட்டுவதன் மூலம் சுட்டிக் காட்டுகின்றது.

(இவ்வளவு பெரிய) பூமியை நாம் (உங்களுக்கு) தொட்டிலாகவும் மலைகளை முளைகளாகவும் அமைக்கவில்லையா? கோடிகோடியாக உங்களை நாமே படைத்திருக்கிறோம். நாமே உங்களுடைய நித்திரையை சிரமப் பரிகாரமாக்கினோம். நாமே இரவை போர்வையாக ஆக்கினோம். பகலை வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்ளும் நேரமாக்கினோம். உங்களுக்கு மேலிருக்கும் பலமான ஏழு வானங்களையும் நாமே அமைத்தோம். அதில் சூரியனை பிரகாசிக்கும் விளக்காகவும் அமைத்தோம். கார் மேகங்களிலிருந்து பெரும் மழையையும் பொழியச் செய்கின்றோம். அதனைக் கொண்டு தானியங்களையும் புற்பூண்டுகளையும் முளைப்பிக்கின்றோம். கிளைகள் அடர்ந்த சோலைகளையும் (உற்பத்தி செய்கின்றோம்) *(78:6-16)*

மனிதன் மறுமையை இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டுமென்பதை அல்குர்ஆன் எடுத்துக் காட்டியது.

நீங்கள் கப்ருகளை சந்திக்கும்வரையில் (பொருளை) அதிகப்படுத்திக் கொள்ளும் பேராசை உங்களை பராக்காக்கிவிட்டது. *(102:1-2)* நிச்சயமாக அவன் மிக்க கடினமாகவே பொருளை நேசிக்கின்றான். *(100:8)* தன்னுடைய பொருள் தன்னை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்யுமென்று மெய்யாகவே எண்ணிக் கொண்டு பொருளை சேகரித்து (செலவிடாது) அதனை எண்ணிக் கொண்டே இருக்கின்றான். *(104:2-3)* மறுமையின் தீர்ப்பைப் பொய்யாக்குபவனை நீர் பார்த்தீரா? அநாதைகளை விரட்டுபவன் அவன்தான். அவன் ஏழைகளுக்கு (ஆகாரமளிக்காததுடன்) ஆகாரமளிக்கும்படி (பிறரை) தூண்டுவதுமில்லை... அற்பப் பொருளையும் (இரவல் கொடுக்காது) தடுத்துக் கொள்வார்கள். *(107:2,3,7)* இவை தனிமனிதன் தனக்காக மட்டும் வாழாது சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்காகவும் வாழ வேண்டும், உதவ வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

வானம் தன் இறைவனின் கட்டளைக்கு செவிசாய்த்து அதற்கு விதிக்கப்பட்ட படி பிளந்துவிடும்போது, பூமியும் தன்னிடமுள்ளவைகளை எறிந்து வெறுமையாகும் போது (யுக முடிவு சம்பவிக்கும்) தொடர்ந்து எவனுடைய வலக் கரத்தில் வினைச் சீட்டு கொடுக்கப்படுகிறதோ அவன் இலகுவாக கணக்குக் கேட்கப்படுவான். சந்தோஷத்துடன் குடும்பத்தார்களிடம் திரும்புவான். எவனுடைய வினைச்சீட்டு முதுகுப்புறமாக கொடுக்கப்படுகிறதோ அவன் தனக்குக் கேடுதான் என்று கூவிக் கொண்டே நரகில் நுழைவான். *(84:1-12)* என்று மறுமையைப் பற்றி எச்சரிக்கை செய்கின்றது.

மறுமையின் நற்பேற்றிற்காக இம்மையில் செயல்பட வேண்டுமென்பதை அல்குர்ஆன் பல இடங்களில் எடுத்துக் காட்டுகின்றது.

உங்களில் எவர் செயல்களில் மிக அழகானவனர் என்பதில் உங்களை சோதிக்கும்பொருட்டே அவன் வாழ்வையும் மரணத்தையும் படைத்தான். *(67:2)* எவர்கள் விசுவாசம் கொண்டு நற்கருமங்களை செய்கின்றாரோ நிச்சயமாக அவர்களுக்கு என்றென்றும் நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும் சுவனம் உண்டு. *(85:11)*

இவ்வாறெல்லாம் தனி நபர் உருவாக்கத்திற்கான போதனைகளை வழங்குகின்ற அல்குர்ஆன் தனிமனிதன் தான் யார் என்பதை விளங்கி அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகிறது.

அவன்தான் தன் பிரதிநிதிகளாக பூமியில் உங்களை ஆக்கினான். அன்றியும் உங்களில் சிலரை மற்றோரைவிட பதவிகளில் உயர்த்தியிருக்கிறான். *(6:165)* ஆதமுடைய சந்ததியை நிச்சயமாக நாம் கண்ணியப்படுத்தினோம். *(17:70)* நம்முடைய பொறுப்பை சுமந்துகொள்வீர்களா என்று வானங்கள், பூமி, மலைகள் முதலியவைகளிடம் வினவினோம் அதற்கு அவை பயந்து சுமந்துகொள்ளாது விலகிவிட்டன. அதைத்தான் மனிதன் சுமந்துகொண்டான். *(33:72)*

அவனே மனிதனைப் படைத்தான் அவனே மனிதனுக்கு பேசவும் கற்றுக்கொடுத்தான். *(96:4)* பெண்கள், மக்கள், பொன், வெள்ளிகளின் பெருங் குவியல்கள், உயர்ந்த குதிரைகள், கால்நடைகள், விளைச்சல்கள் ஆகியவற்றின் மீது ஆழ்ந்த பற்று கொள்வது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. *(3:14)*

ஆதமுடைய சந்ததிகளே! நீங்கள் ஷைத்தானை வணங்கக் கூடாது. நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்க விரோதி என்றும் நான் உங்களிடம் உறுதிமொழி வழங்கவில்லையா? *(36:60)*

மேற்கூறிய வசனங்கள் மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி, அவன் கண்ணியப்படுத்தப்பட்டுள்ளான், அவனுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது, அவன்மீது பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளது, அவனுக்கு பல ஆற்றல்கள் வழங்கப்பட்டுள்ளன, அவனுக்கு ஆசைகளும் உண்டு, ஷைத்தான் அவனை வழிகெடுக்க காத்திருக்கிறான் என்ற கருத்துக்களை முன்வைக்கின்றன. இவை மனிதனுக்கு சுய கௌரவத்தை வழங்குவதோடு அவனை உரிமையோடு செயற்படவும் தூண்டுகின்றது. இவை தனிமனித உருவாக்கத்தில் அல்குர்ஆனின் பங்கை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

நாம் இங்கு நபி (ஸல்) அவர்கள் அல்குர்ஆனின் ஒளியில் தனிநபர்களை உருவாக்கிய முறையின்கீழ் சில அம்சங்களை மட்டும் சுட்டிக் காட்டினோம். ஒரு சமுதாயம் உருவானதன் பின்னர் தனிநபர் உருவாக்கம் குடும்பத்திற்கூடாகவே இடம்பெறுகிறது. தனிநபரையும் சமூகத்தையும் இணைக்கின்ற பாலமாக குடும்பம் அமைகின்றது. இன்ஷா அல்லாஹ் குடும்ப உருவாக்கம் பற்றிய தலைப்பில் தனிநபர் உருவாக்கம் பற்றிய மற்றும் சில விடயங்களை அவதானிப்போம்.

ஒரு மனிதன் மரணித்துவிட்டால் அவனது உலகத் தொடர்புகள் யாவும் அறுந்துவிடுகின்றன; மூன்று விடயங்களைத் தவிர. அவை, நிரந்தரமாகப் பயன் பெறப்படும் தர்மம், பயன்தரத்தக்க கல்வி, ஸாலிஹான குழந்தையின் பிரார்த்தனை. (முஸ்லிம்)

குழந்தைகளை வளர்க்கும் நீங்கள் முதன்முதலில் உங்களைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், நீங்கள் எதைச் செய்கின்றீர்களோ அது நல்லதாகவும், நீங்கள் எதைத் தவிர்க்கிறீர்களோ அது கெட்டதாகவும் குழந்தைகளிடம் கருதப்படும். எனவே, ஆசிரியர்களும் பெற்றோர்களும் குழந்தைகளிடம் மேற்கொள்ளும் சிறந்த அணுகுமுறையே குழந்தைகளைப் பண்படுத்தும் சிறந்த வழியாகும்.

குழந்தைகளைப் பரிபாலிப்பவர்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டியவை:

1. குழந்தைப் பருவத்திலேயே 'லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்ற உறுதிமொழியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். பருவமெய்தும்போது அதன் கருத்தாகிய உண்மையில் வணங்கப்பட தகுதிவாய்ந்தவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்பதை விளக்க வேண்டும்.

2. இறைவனின் நேசத்தையும் அவனை விசுவாசிப்பதையும் குழந்தையின் உள்ளத்தில் விதைக்க வேண்டும். ஏனெனில், அல்லாஹ்தான் நம்மைப் படைத்தவன், உணவளிப்பவன், இரட்சிப்பவன், அவனுக்கு இணையென்று யாருமில்லை, அவனே உண்மையில் வணங்கப்படத் தகுதியானவன்.

3. குழந்தைகளுக்கு சுவர்க்கத்தைப் பற்றிய ஆசையை ஊட்ட வேண்டும். யார் தொழுது, நோன்புநோற்று, பெற்றோர்களுக்குக் கட்டுப்பட்டு, இறைவனின் திருப்தியை எதிர்பார்த்து அமல் செய்கிறாரோ அவருக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்பதைக் கூற வேண்டும். மேலும் நரகத்தைப் பற்றியும் அச்சமூட்ட வேண்டும். யார் தொழாமல் நோன்பு நோற்காமல், பெற்றோர்களை நோவினைப் படுத்திக் கொண்டு, இறைவனை அதிருப்திப் படுத்திக்கொண்டு, வட்டி வாங்கி, தீமைகள் செய்கின்றானோ அவனுக்கு நரகம் கிடைக்கும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

4. அல்லாஹ்விடம் மட்டுமே எதையும் கேட்கவோ, உதவிதேடவோ வேண்டும் எனக் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் தமது பெரிய தந்தையின் மகன் இப்னு அப்பாஸ் (றழி) அவர்களுக்கு "நீ எதையும் அல்லாஹ்விடமே கேள், உதவி தேடுவதாக இருந்தாலும் அவனிடமே தேடு" எனக் கூறினார்கள். (திர்மிதி)



# நான் ஒரு

நான் ஒரு முஸ்லிம், இறைவன் ஒருவன் என்றும் அவன் தனித்தவன் என்றும் சாட்சியம் கூறியிருக்கின்றேன். அத்துடன் முஹம்மத் [ஸல்] அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் எமது வழிகாட்டி என்றும் சாட்சியம் கூறியிருக்கின்றேன்.

நான் ஒரு முஸ்லிம். எனது பெற்றோர் முஸ்லிம் என்பதாலோ எனது குழந்தைகள் முஸ்லிம் என்பதாலோ நான் முஸ்லிம் இல்லை. மாற்றமாக இறைவன் பற்றிய, இறைதூதர் பற்றிய, மலக்குமார்கள், வேதங்கள் பற்றிய, மறுமைநாள் பற்றிய நம்பிக்கைகளினாலே நான் முஸ்லிமாக இருக்கின்றேன்.

நான் ஒரு முஸ்லிம், நான் கண்டிராத அந்த மகத்துவமிக்க படைப்பாளனை மிக ஆழமாக நம்புகின்றோம். அவனது இருப்புக்கு நானும் இந்த உலகத்திலுள்ள கோடான கோடி உயிரினங்களும் சாட்சியாக இருக்கின்றன. முஹம்மத் [ஸல்] அவர்களையும் அவர்களுக்கு முன்னர் வாழ்ந்த தூதர்களையும் நான் உறுதியாக நம்புகின்றேன். பேரோசை முழங்கும் அந்நாளில் ஒரு மனிதன் தனது சகோதரனை விட்டும் தனது தாய் தந்தையை விட்டும் தனது மனைவி, குழந்தைகளை விட்டும் ஓடுகின்ற நிகழ்விற்கு நான் மிகவும் பயப்படுகின்றேன்.

நான் நேசிக்கின்ற அந்த உறவுகளை விட்டுவிட்டு விரண்டோட வேண்டி வரும் என்பதை நினைக்கும்போது கஷ்டமாக இருக்கின்றது. ஆனால், அதுதான் உண்மையாகவும் இருக்கின்றது. எனக்கு யாரும் உதவி செய்யாத, என்னால் யாருக்கும் உதவி செய்ய முடியாத அந்த நாளை நினைக்கும்போது மனது நடுங்குகின்றது. அந்நாளில் என்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நான் நன்மைகளை செய்துகொள்ள வேண்டும். அதற்காக நான் மிகவும் கஷ்டப்படுகின்றேன்.

நான் ஒரு முஸ்லிம், ஒரு முஃமினுக்கும் காபிருக்கும் இடையிலான பிரிகோடு தொழுகை என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே, ஐந்நேரத் தொழுகைகளையும் பேணுதலாக நிறைவேற்றுகின்றேன். தொழுகையில் உள்ளச்சத்தோடு இருக்கின்றேன். தொழுகையில் பொடுபோக்காக இருப்பவர்களுக்கு கேடுதான் என்பதை நம்புகின்றேன்.

நான் ஒரு முஸ்லிம். தொழுகையின் போது எனது உள்ளம் அமைதி அடைகின்றது. தொழுகை என்னைப் பாவங்களைவிட்டும் மோசமான செயல்களைவிட்டும் பாதுகாக்கின்றது.

நான் ஒரு முஸ்லிம், கடந்த ரமழான் மாத நோன்புகள் அனைத்தையும் நோற்றேன். நோன்பாளி நோன்புதிறக்கும் போது கேட்கும் துஆக்கள் அங்கீகரிக்கப்படும் என்பதனால் எனது தந்தைக்காக, தாய்க்காக, சகோதர சகோதரிகளுக்காக, ஆசிரியர்களுக்காக, உலகிலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்காக வும் பிரார்த்தித்தேன்.

நான் ஒரு முஸ்லிம். ரமழான் எனக்கு நிறைய பாடங்களைக் கற்றுத்தந்தது. ஏழைகளின் பசியை உணர்த்தியது. எனக்கு எல்லா சந்தர்ப்ப சூழ்நிலைகளும் வசதிகளும் உள்ளபோதும் பாவங்களிலிருந்தும், இச்சைகளிலிருந்தும் என்னால் தவிர்ந்திருக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. ரமழான் மாதத்தில் ஒரு ஸுன்னத்தான செயலுக்கு ஒரு பர்ளினது நன்மையும் ஒரு பர்ளான

# முஸ்லிம்

ஏ.ஸீ.எம். நதீர்

செயலுக்கு 70 பர்ளுகளின் நன்மையும் கிடைக்கும் என்பதற்காக அதிகம் அதிகமாக இபாதத்களில் ஈடுபட்டேன்.

நான் ஒரு முஸ்லிம். ரமழான் மாதத்தில் நபி [ஸல்] அவர்கள் காற்றைவிட வேகமாக ஸதகா செய்தார்கள். நான் முடிந்தவரை ஸதகா செய்தேன். எனினும், எனக்கு அதில் திருப்தியில்லை. இன்னுமொரு ரமழான் கிடைக்க வேண்டுமென இப்போதிருந்தே பிரார்த்திக்கிறேன்.

அடுத்த ரமழான் வரையும் நோன்பு நோற்பதற்கான நிறைய நாட்கள் இருப்பதை நான் அறிவேன். ஒவ்வொரு வாரமும் திங்கள் வியாழக் கிழமைகளில் நோன்பு நோற்கலாம்.

நான் ஒரு முஸ்லிம். நான் ஸகாத் கொடுக்கும் அளவு சம்பாதிக்கவில்லை. எனினும், ஸகாத் கொடுக்க முடியுமானவர்களுக்கு நான் வழிகாட்டியிருக்கின்றேன். ஸகாத் எமது செல்வத்தை தூய்மைப்படுத்தும். அதில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் என்பதில் எனக்கு கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

நான் ஒரு முஸ்லிம். வாழ்நாளில் ஒருமுறையேனும் ஹஜ் செய்துவிட வேண்டும் என்ற வேட்கை இருக்கின்றது. நேற்றைய கனவுகள் இன்று நடந்தேறியிருப்பின் இன்றைய கனவுகள் நாளை நடந்தே தீரும் என்ற ஷஹீத் ஸெய்யித் குத்பின் வரிகள் எனக்கு அடிக்கடி நினைவில் வரும்.


நான் ஒரு முஸ்லிம். ஹாஜர் [அலை], ஸபா மர்வாக்கிடையில் நீர் தேடி ஓடிய துயரத்தை நானும் அனுபவிக்க வேண்டும். அந்த அற்புத நீரூற்றினை கண்களால் காண வேண்டும். கஃபாவிற்கு முன்னிருந்து தொழ வேண்டும். கால் கடுக்கும்வரை அதனைத் தவாப் செய்ய வேண்டும். ஹிராக் குகையில் தனித்திருக்க வேண்டும். மஸ்ஜிதுந் நபவியில் தொழ வேண்டும். எனது ஆசைகளை இறைவன் நிச்சயம் நிறைவேற்றுவான்.

நான் ஒரு முஸ்லிம். மனிதன் என்றவகையில் எனக்குள்ள தேவைகளை நான் உணர்ந்திருக்கிறேன். நான் தேவையான அளவு உண்ணுகின்றேன். பருகுகின்றேன். அவை ஹலாலாக இருக்க வேண்டும் என்பதற்காக உழைக்கின்றேன். உழைப்பில் மோசடி இடம்பெற்றுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றேன். என்னையும் மீறி இடம்பெறும் தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்கின்றேன்.

நான் ஒரு முஸ்லிம். அளவை நிலுவைகளில் மாத்திரமன்றி நான் செய்யும் அனைத்து விடயங்களிலும் மோசடி செய்யலாம். எனவே, நான் எனது தொழிலில் மோசடி இடம்பெறாது இருக்க வேண்டும் என்பதற்காக கடுமையாக முயற்சிக்கின்றேன். மோசடி செய்பவர்களுக்கு கேடுதான் என்ற அல்குர்ஆன் வசனம் எனக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

நான் ஒரு முஸ்லிம். எனது மனைவி தூய்மையானவளாக இருப்பாள். சிறந்தவளாக இருப்பாள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கின்றது. மோசமான பெண்களுக்கு மோசமான ஆண்களும், மோசமான ஆண்களுக்கு மோசமான பெண்களும், சிறந்த பெண்களுக்கு சிறந்த ஆண்களும், சிறந்த ஆண்களுக்கு சிறந்த பெண்களும் கிடைப்பார்கள் என்பதை நான் விசுவாசிக்கின்றேன்.

ஏனைய மனிதர்களுக்கும் எனக்குமிடையிலான உறவுகளில் நான்



தவறிழைப்பதாக உணர்கின்றேன். சிலபோது இனபந்துகளை சேர்ந்து நடப்பதிலும் மற்றும் சிலபோது நண்பர்களை சேர்ந்து நடப்பதிலும் குறை செய்வதுபோல உணர்கிறேன்.

நான் ஒரு முஸ்லிம். ஏனைய முஸ்லிம்களின் உரிமைகள் பறிக்கப்படக் கூடாது என்பதில் எனக்கு முரண்பாடுகள் ஏதும் இல்லை. புறம் பேசுவதும் அவதூறு கூறுவதும் ஏனைய முஸ்லிம்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு காரணமாக அமைகின்றன. சிலபோது நானும் இந்தத் தவறுகளில் ஈடுபட்டுவிடுகின்றேன். இவற்றிற்கான தண்டனைகளை நன்கறிவேன். எனவேதான், என்னைப் பற்றி யார், எதனைப் பேசினாலும் நான் மன்னித்துவிடுகிறேன்.

நான் ஒரு முஸ்லிம். எல்லா மனிதர்களும் மரணத்தை சுவைத்தே தீர வேண்டும். நாம் எந்தக் கோபுரத்தின் உச்சியில் இருந்தாலும் அல்லது அதல பாதாளத்தில் இருந்தாலும் மரணம் எம்மை சந்தித்தே தீரும். இனிவரும் வினாடிகளில், நிமிடங்களில், மணித்தியாலங்களில், நாட்களில், கிழமைகளில், மாதங்களில், வருடங்களில், மரணம் என்னை சந்திக்கும். உலகத்திலுள்ள மிகப் பெரும் உண்மை மரணம்தான்.

நான் ஒரு முஸ்லிம். மரணத்தின் பின் என்னை கப்ருக்குள் வைத்துவிட்டு எல்லோரும் சென்றுவிடுவார்கள். நான் தனிமையில் இருப்பேன். எனக்கு நம்பிக்கை இருக்கின்றது, எனது கப்ரு ஒளி பொருந்தியதாகவே இருக்கும்.

நான் ஒரு முஸ்லிம். வானமும் பூமியும், மலைகளும் குன்றுகளும், கடலும் ஆறுகளும் இழந்து தரைமட்டமாகும் நாள்வரை நான் கப்ருக்குள் இருப்பேன். மாட்சிமை மிக்க இறைவனை சந்திக்கும் தீர்ப்பு நாளில் எனது வலது கையில் பட்டோலை கிடைக்கப்பெறும் என்பதையும் நம்புகின்றேன். நான் அதனை எடுத்துக் கொண்டு குடும்பத்தாரிடமும் நண்பர்களிடமும் ஏனையவர்களிடமும் சொல்லித் திரிவேன். அதைவிட வேறு எந்த மகிழ்ச்சியும் இல்லை.

நான் ஒரு முஸ்லிம். எனது சிறிய தவறுகளை இறைவன் மன்னித்துவிடுவான். என்னை பெரும் பாவங்களைவிட்டும் பாதுகாத்துவிடுவான். என்னை நிரபராதியாக்கி நதிகள் ஓடும் அழகிய சுவனத்தில் நுழைத்துவிடுவான். எனது இறைவனின் அருளின் மீது எனக்கு பூரண நம்பிக்கை இருக்கின்றது. அந்த நாள் வரும்வரை காத்திருக்கிறேன்.

# தக்லீத்

## புரிந்து கொள்வதற்கான சில குறிப்புகள்

தக்லீதின் ஹராமான வடிவங்கள் குறித்து கடந்த அமர்வில் நோக்கினோம். அவை பின் வரும் பிரதான மூன்று வடிவங்களில் அமைவதாக இமாம் இப்னுல் கையிம் கூறினார்.

1. நபியவர்களின் காலத்து முஷ்ரிக்குகள் செய்ததுபோல் அல்லாஹ் இறக்கியவற்றைப் புறக்கணித்துவிட்டு தமது முன்னோர்களைப் பின்பற்றுகின்ற நிலை.
2. ஒருவரது தகைமையை அறிந்து கொள்ளாமல் அவரைப் பின்பற்றல்.
3. ஒருவரது கருத்து நேரடியாகக் குர்ஆன் ஸுன்னாவுக்கு முரண்படுகின்ற போதும் அதனைப் பின்பற்றல்.

இன்ஷா அல்லாஹ் இந்த அமர்வில் தக்லீதின் வாஜிபான வடிவம் குறித்து பார்வையைச் செலுத்த நினைக்கிறோம்.

வாஜிபான தக்லீத் எது என்பதைப் புரிந்து கொள்ள முற்படுகின்ற போது ஒரு முக்கிய பின்புலத்தை விளங்கியிருத்தல் அவசியமாகின்றது. அதாவது தக்லீத், இஜ்திஹாத் என்ற எண்ணக் கருக்களை இணைத்து நோக்குகின்ற போது இமாம்கள் மத்தியில் காணப்படும் இருவகையான கருத்துக்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

1- இமாம்களில் ஒரு சாரார் தக்லீத் அனைவர் மீதும் வாஜிப் என்று சொல்கின்ற அதே வேளை இஜ்திஹாதை அனைவர் மீதும் ஹராமாக்குகின்றனர்.

2- மற்றொரு சாரார், தக்லீத் அனைவர் மீதும் ஹராமானது, இஜ்திஹாதை அனைவர் மீதும் வாஜிபானது என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

இந்த இருவகை நிலைப்பாடுகளினதும் கால, சூழல் வாதப் பிரதிவாதப் பின்புலங்களை நோக்குகின்ற பொழுது இவை இரண்டிலும் அங்கீகரிக்க முடியுமான பக்கங்கள் காணப்படுவதுபோல, அங்கீகரிக்க முடியாத அல்லது அலங்கீகரிக்கக் கூடாத பக்கங்களும் காணப்படுகின்றன.

இங்கு ஒரே நேரத்தில் தக்லீத் வாஜிபாகவும் ஹராமாகவும் அமைகிறது. அதேபோல் இஜ்திஹாதும் வாஜிபாகவும் ஹராமாகவும் அமைகின்றது. உண்மையில் தக்லீதிலும் சரி, இஜ்திஹாதிலும் சரி, இந்த இரண்டு தீர்ப்புகளும் சரியானதே. ஆனால், அந்த இரண்டு தீர்ப்புக்களையும் வரையறை செய்யாமல் பொதுமைப்படுத்தி வழங்கியமைதான் தவறானதாகும்.

தக்லீதை எல்லா விவகாரங்களிலும் வாஜிபாக்கியது தவறாகும். அத்துடன் எல்லா மனிதர்களுக்கும் வாஜிபாக்கியமையும் தவறாகும். நாம் கடந்த பத்திகளில் நோக்கியது போல தக்லீத் ஹராமாக அமைகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அதுபோல் அறிஞர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மீதும் தக்லீத் வாஜிபானது என்று கூறுவது தவறானதாகும். இதன் மறுபக்கத்தைத்தான் இஜ்திஹாதில் காண்கின்றோம். அங்கும் இஜ்திஹாதை அறிஞர்களுக்கும் ஹராமாக்கியது தவறானதாகும். அதேநேரம் பொதுமக்களும் இஜ்திஹாதில் ஈடுபட வேண்டும் என்பதும் தவறானதாகும்.

அத்துடன் இங்கு பொதுமக்கள் தக்லீத் செய்வது ஒரு சாராரால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது அங்கீகரிக்க முடியுமான நிலைப்பாடாகும். அத்துடன் அறிஞர்கள் இஜ்

**இஸ்லாமியக் கலைகளில் பாண்டித்தியம் பெறாத, இஜ்திஹாதில் ஈடுபடத் தகுதியற்ற ஒரு பொதுமகனைப் பொறுத்தவரையில் அவன் தக்லீத் செய்வது வாஜிப் என்பதே ஜும்ஹூருடைய நிலைப்பாடாகும்.**

திஹாதில் ஈடுபடலையும் மற்றைய சாரார் அனுமதித்துள்ளனர். இதுவும் அங்கீகரிக்கத்தக்க நிலைப்பாடாகும்.

மேற்கூறிய இரு கருத்து நிலைப்பாடுகளிலும் தக்லீதைப் பொதுமக்களுக்கு அனுமதித்து இஜ்திஹாதினை அறிஞர்களுக்கு அனுமதிக்கும் ஒருதலை நிலைப்பாடே ஷரீஆ அங்கீகரிக்கும் நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாட்டைத்தான் இமாம் இப்னு தைமியா போன்ற பெரும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தக்லீதின் வகைகளில் இரண்டாவது வகையான வாஜிபான தக்லீத் பற்றி பேசுகின்ற பொழுது அதில் பிரதானமாக நாம் எதனைக் குறித்து நிற்கின்றோம் எனில் பொதுமக்கள் மீது தக்லீத் வாஜிபானது என்பதே ஆகும். மாற்றமாக அறிஞர்கள் மீது தக்லீத் ''வாஜிபானது'' என்றோ அல்லது எல்லா விவகாரங்களிலும் தக்லீத் வாஜிபானது என்றோ இங்கு கூறப்பட வில்லை.

வாஜிபான தக்லீத் பற்றி இமாம்கள் கீழ்வரும் நிலைகளில் பேசியுள்ளனர்.

1- மார்க்கத்தின் இணை விவகாரங்கள் எனும் இஜ்திஹாதுக்கு உட்பட முடியுமான பரப்புக்களில் தக்லீத் அனுமதிக்கப்பட முடியும்.

2- சட்ட வசனங்களின் ஆழ, அகலங்களையும் நெளிவு, சுழிவுகளையும் புரிந்துகொள்ள முடியாத அவற்றிலிருந்து சட்டமுடிவுகளை பெற்றுக்கொள்ளத் தகுதியற்ற பொதுமக்களுக்கு தக்லீத் அனுமதிக்கப்பட முடியும்.

3- இஸ்லாமியக் கலைகள் தொடர்பான பரீட்சயத்தைப் பெற்றிருப்பவர், ஆனால், இஜ்திஹாதில் ஈடுபடும் தகுதியைப் பெறாதவர். இவருக்கும் தக்லீத் அனுமதிக்கப்பட முடியும்.


இந்த இரு வகையினரும் இணை விவகாரங்களில் தக்லீத் செய்ய முடியும். அது அவர்கள் மீது வாஜிபாகும் என்பது பெரும்பாலான இமாம்களின் (ஜும்ஹூர்) நிலைப்பாடாகும். இது பற்றிய சில இமாம்களின் கூற்றுக்களை கீழே நோக்குவோம்.

இமாம் இப்னு அப்தில் பர் கூறுகிறார்; ஒரு பொது மகனைப் பொறுத்தவரை ஒரு பிரச்சினையை எதிர் நோக்குகின்ற போது அறிஞர்களை தக்லீத் செய்வது அவசியமாகும். ஏனெனில், அவனால் குறித்த பிரச்சினைக்கான ஆதாரத்தைக் கண்டறியவோ, அதனை விளங்கிக் கொள்ளவோ முடியாமல் இருக்கும். ஏனெனில், அறிவு என்பது பல வடிவங்களைக் கொண்டது. அதன் ஆரம்பப் படியைக் கடந்தால்தான் உச்சப்படியை அடைந்துகொள்ள முடியும். இதுதான் பொதுமகன் ஆதாரத்தை அடைந்துகொள்ள தடையாய் அமைகிறது. எனவே, பொதுமக்கள் அறிஞர்களை தக்லீத் செய்ய வேண்டும் என்பதில் இமாம்கள் கருத்துவேறுபாடு கொள்ளவில்லை என்றார். (ஜாமிஉல் பயானில் இல்ம் வப் பழ்லிஹீ: பாகம் 2 பக்கம்: 140)

இமாம் கஸ்ஸாலி அவர்கள் கூறுகின்றார்கள்; பொது மகனைப் பொருத்தவரை அறிஞர்களைப் பின்பற்றுவதும் அவர்களிடம் பத்வாக் கேட்பதும் கடமையாகும். (முஸ்தஷ்பா பாகம்: 2 பக்கம்: 124)

இமாம் ஆமிதீ அவர்கள் கூறுகிறார்கள்; சுயமாய் இஜ்திஹாதில் ஈடுபட முடியாத பொது மகன் அல்லது இஜ்திஹாத் துறையில் குறிப்பிடத்தக்க அறிவைப் பெற்றிருப்பவர் முஜ்தஹித்களுடைய வார்த்தைகளையும் அவர்களது பத்வாக்களையும் பின்பற்றுவது அவசியமாகும். (இஹ்காம், பாகம்: 4, பக்கம்: 228)

அடுத்து, இமாம்கள் குறிப்பிட்ட அந்த மூன்று நிலைகள் குறித்தும் சற்று பார்வையைச் செலுத்துவோம்.



முதலாவது, பொதுமகனும் சரி, ஓரளவு இஸ்லாமியக் கலைகளைக் கற்றவனும் சரி, கிளை விவகாரங்களில் தக்லீதில் ஈடுபடுதலை பற்றிப் பேசுகிறது. இங்கு கிளை விவகாரங்களில் தக்லீத் அனுமதிக்கப்படுகிறது எனின் அடிப்படைகளில் அனுமதிக்கப்படவில்லை என்ற பொருள் மறைமுகமாகத் தொனிக்கின்றது. அடிப்படை விவகாரங்கள் எனும்பொழுது அதனை இமாம்கள் நம்பிக்கை சார்ந்த அம்சங்கள் என்றும் சட்ட அடிப்படைகள் என்றும் அடையாளப்படுத்தியுள்ளனர்.

நம்பிக்கை சார்ந்த விடயங்களில் தக்லீத் செய்தல் பற்றி கடந்த பத்தியில் பேசப்பட்டது. உண்மையில் நம்பிக்கையில் தக்லீத் அனுமதிக்கப்படுமா? என்பதும் இமாம்கள் மத்தியில் பலத்த வாதப் பிரதிவாதங்களுக்குரிய விடயமாகத்தான் காணப்படுகிறது. தக்லீத் என்ற எண்ணக்கருவின் அடிப்படைப் பொருளான தங்கி நிற்றல் எனும் கருத்தில் நின்று நோக்குகின்றபொழுது ஒருவரில் தங்கி நின்று நம்பிக்கையைப் பெறுவதை உண்மையில் யாரும் மறுதலிக்கவில்லை. ஆனால் அவருடைய நம்பிக்கையில்தான் இவருடைய நம்பிக்கையும் தங்கி நிற்கின்றது என்ற நிலையை ஷரீஆ அங்கீகரிக்கவில்லை. அதாவது, அவரது நம்பிக்கை மாற்றமடைந்தால் இவரது நம்பிக்கையும் மாற்றமடைந்து விடும் என்ற நிலையை எவரும் அனுமதிக்கவில்லை. எனவே, நம்பிக்கையைப் பொறுத்தவரை நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதில் அல்லது அறிந்து கொள்வதில் தக்லீத் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அதில் நிலைத்து நிற்றலில் தக்லீத் அனுமதிக்கப்படவில்லை.

அடுத்து சட்ட அடிப்படைகளைப் பொறுத்தவரையில், இங்கும் அதே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஆனால், அந்தக் கருத்து வேறுபாட்டை சற்று ஆழ்ந்து

நோக்குகின்ற பொழுது அது பொது மக்கள் பற்றிப் பேச வில்லை என்பதையும் மாற்றமாக அது அறிஞர்கள் பற்றியே பேசுகின்றது என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே, சட்ட அடிப்படைகளில் தங்கி நிற்றல் அல்லது தக்லீத் என்ற விவகாரம் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட தல்ல, அறிஞர்கள் சம்பந்தப்பட்டது. ஆகவே, பொதுமக் கள் குறித்துப் பேசுகின்றபொழுது இத்தகைய ஒரு தலைப் புப் பற்றி பேச வேண்டிய அவசியமில்லை. அறிஞர்கள் குறித்து என்ன நிலைப்பாட்டிற்கு வரலாம் என்பது பற்றி இன்ஷா அல்லாஹ் மத்ஹபுகள் குறித்துப் பேசுகின்ற போது விரிவாக நோக்குவோம்.

அடுத்து இஸ்லாமியக் கலைகளில் பாண்டித்தியம் பெறாத, இஜ்திஹாதில் ஈடுபடத் தகுதியற்ற ஒரு பொது மகனைப் பொறுத்தவரையில் அவன் தக்லீத் செய்வது வாஜிப் என்பதே ஜும்ஹூருடைய நிலைப்பாடாகும். இமாம் இப்னு குதாமா போன்ற சிலர் இது இஜ்மாவான முடிவாகும் என்று தெரிவித்துள்ளனர். அந்த வகையில் ஒரு பொதுமகன் தான் விரும்புகின்ற அறிஞரைப் பின் பற்றுவதில் தவறில்லை. அவர் யாரிடமும் பத்வா பெற்று அதனைப் பின்பற்றலாம். அதனைத் தடை செய்கின்ற உரி மையை எவரும் கையில் எடுக்க முடியாது, அதேவேளை குறித்த பொதுமகன் தான் பத்வா கேட்கும் அறிஞரின் மார்க்க நடத்தை குறித்தும், அவரது தகைமை குறித்தும் அறிவோடும் நம்பிக்கையோடும் காணப்படல் வேண்டும்.

அதேநேரம் கடந்த பத்தியில் குறிப்பிட்டது போல், ஒரு பொதுமகன் வெறியுணர்வுடன் நடந்துகொள்ளவும் கூடாது. தனக்கு பத்வா சொன்னவர் மட்டுமே நேர்வழி நடப்பவர், மாற்றமான அனைத்தும் வழிகேடானவை என்ற உணர்வுக்கு ஒருபோதும் அவர் வந்துவிடக் கூடாது என்பது மட்டுமல்ல, அவருக்கு எவரும் அந்த வெறியு ணர்வை ஊட்டி விடவும் கூடாது.

இன்று நடந்தேறிக் கொண்டிருக்கும் அவலநிலை இதுதான். பொதுமக்களிடம் வழங்கப்படுவது பத்வா மட்டு மல்ல, இந்தக் கருத்து மட்டுமே சரியானது ஏனையவை பிழையானது, இதுதான் ஸுன்னத், ஏனையவை வழி கேட்டில் இருக்கின்றன போன்றவையும் சேர்த்துத்தான் பரிமாறப்படுகின்றன. இங்குதான் அறிஞர்களது பணி முக்கியம் பெறுகிறது. அவர்களது பார்வைகள் விசாலப் படுத்தப்பட வேண்டும். பொதுமக்களிடம் செயல்களை உருவாக்குவதில்தான் அறிஞர்களது கவனம் குவிய வேண்டும். மாற்றமாக எதிர்ப்புணர்வை உருவாக்குவ திலல்ல. அவர்களுக்கு அவசியமானதை மட்டுமே வழங்குவோம். அவசியமற்றதைத் தவிர்ப்போம்.

அடுத்து, இஸ்லாமியக் கலைகளில் ஓரளவு பரிச்சயம் கொண்டவர்களைப் பொருத்தவரையில், அவருக்கு முன்னால் உள்ள தெரிவும் தக்லீத் செய்வதைத் தவிர வேறில்லை. ஏனெனில், அவர் குறித்த கலைகளில் ஆரம்ப அறிவைப் பெற்றிருப்பார். குறித்த அந்தப் பாஷை யைப் புரிந்துகொள்வார். ஆனால், அந்த இஜ்திஹாத் என்ற செயன்முறையில் ஈடுபடுகின்ற அளவுக்கு பரந்த அறிவும் நுணுக்கமும் முதிர்ச்சியும் அவரிடம் காணப்பட மாட்டாது.


இவர்கள் ஆதாரம் என்றால் என்ன? அவை எங்கே காணப்படுகின்றன? அவற்றில் பலமானது, பலவீனமா னது எவை? சட்ட வசனம் என்றால் என்ன? அதிலிருந்து சட்ட முடிவு இவ்வாறுதான் பெறப்படுகிறது என்று சொன் னால் இவற்றைப் புரிந்து கொள்வார்கள். எனவே, சாதா ரண பொதுமகனை விடவும் நிச்சயமாக இவர்கள் சற்று மேலே நிற்கின்றவர்கள். இவர்களைப் பார்த்துத்தான் இமாம் ஹஸனுல் பன்னா அவர்கள் இவ்வாறு அழைப்பு விடுக்கிறார்கள்.

''இஜ்திஹாதுடைய தரத்தை அடையாதவர்கள் ஒரு இமாமைப் பின்பற்ற முடியும். ஆனால் அந்த இமாம் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அந்தக் கருத்தை முன் வைத்துள்ளார் என்பதையும் தெரிந்து கொண்டு பின்பற்று வது மிகவும் சிறந்தது. அத்துடன், தகுந்த ஆதாரங்களுடன் மாற்றுக் கருத்து முன்வைக்கப்படுகின்ற பொழுது முன் வைப்பவரின் நடத்தை, தகைமை குறித்து பிரச்சினை யில்லை எனின் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயங் கக் கூடாது. அதேவேளை, அவர் தனது அறிவுத் தகைமையை அத்துடன் நிறுத்திக் கொள்ளக் கூடாது. அதனை விடுத்து சுயமாய் இஜ்திஹாதில் ஈடுபடும் தகைமையைப் பெற முயல வேண்டும்.'' (இருபது அடிப்படைகளில் 7ஆவது அடிப்படை) என்றார்கள்.

ஆதாரத்தை அறிந்து பின்பற்றலை, சில அறிஞர்கள் தக்லீத் என்ற சொல் கொண்டு அழைக்காது இத்திபாஃ (பின் பற்றல்) என்ற சொல் கொண்டு அழைப்பதும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இறுதியாக, நாம் புரிந்துகொள்ள வேண்டியது இது தான். தக்லீதில் வாஜிபான ஒரு பரப்பு காணப்படுகிறது. எனவே, தக்லீத் என்ற சொல்லைக் கண்ட மாத்திரத்தில் அதனை ஹராமானது என்று ஒதுக்கித் தள்ள முடியாது. அந்த வாஜிபான பரப்பு, ஒரு பொது மகனைப் பொறுத்த வரையில் நம்பிக்கையிலும் காணப்படுகிறது. சட்ட அடிப் படைகளிலும் காணப்படுகிறது. கிளைச் சட்ட முடிவுக ளிலும் காணப்படுகிறது. அந்த வாஜிபை அவனிடமிருந்து யாரும் பறித்து விட முடியாது. எந்த அறிஞரின் பத்வா வையும் ஏற்று செயல்படுத்தலாம். ஆனால், அதில் வெறிக் கொள்கை கூடாது. அறிஞர்கள் அந்தப் பொது மகனின் மூளையில் அவசியமற்றதைப் புகுத்தி அவனைக் குழப்பிவிடவும் தூண்டிவிடவும் கூடாது. பொதுமகனின் தரத்தைத் தாண்டி ஆதாரங்களைப் புரிந்து நிறுத்து பார்க் கக் கூடியவர்களும் ஒரு அறிஞரைப் பின்பற்றலாம். தக் லீத் செய்யலாம். அதனை வாஜிப் என்றே கூறலாம். ஆனால், அந்த எல்லையில் நின்று அவன் சற்று மேலெ ழுந்து செல்ல வேண்டும். மாற்றுக் கருத்தை சீரணிக்க வேண்டும். ஆதாரத்துடன் அமைகின்றபோது ஏற்று செயல் படுத்தவும் பின்நிற்கக் கூடாது. தனது அறிவு தேடும் பணியை முழுமைப்படுத்த முயல வேண்டும். தங்கி நிற்ற லில் இருந்து சுயமாய் நிற்றலை நோக்கி நகர வேண்டும்.

இன்ஷா அல்லாஹ் அடுத்த அமர்வில் ஜாஇஸான தக்லீதுடன் சந்திப்போம். அல்லாஹ் எம்மை அங்கீகரிக் கட்டும்.



அபூ நஷ்வா

# வீட்டுக்கும் தஃவாவுக்கும் மத்தியில்

# முஸ்லிம் பெண்

ஒரு முஸ்லிம் பெண் தனது வாழ்வில் நேரம் ஒதுக்க வேண்டிய பணிகளுள் மற்றுமொரு பிரதான விடயம் குறித்து இன்றைய அமர்வில் கலந்துரையாடப்படவிருக்கிறது.

ஒரு தடவை ஒரு ஈமானிய அமர்வில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அதில் நபியவர்களது ஒருநாள் சராசரி வாழ்க்கை எவ்வாறு கழிந்தது என்பது தொடர்பில் சில சிந்தனைகள் பரிமாறப்பட்டன. அந்த சிந்தனைப் பரிமாற்றத்தில் அபூர்வமாக வெளிப்பட்ட உண்மை என்னவெனில், நபியவர்களது சாதாரண ஒரு நாள் வாழ்க்கையில் அதிக நேரத்தை இபாதத்கள்தான் பிடித்திருந்தன என்பதுதான். இந்நிலையை எமது வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு சகோதரனது கவலை இவ்வாறு வெளிப்பட்டது. நபியவர்களது வாழ்வில் நேரடி இபாதத்துக்கள் அதிக நேரத்தைப் பிடித்துள்ளன. ஆனால், எமது வாழ்வில் தொழில் நேரம்தான் முக்கால்வாசி நேரத்தைப் பிடித்துள்ளது. இது வெறுமனே அரச, தனியார் உத்தியோகங்களில் ஈடுபடுபவர்களிடம் மாத்திரமல்ல, சுய தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுடைய நிலையும் இவ்வாறுதான் காணப்படுகின்றது என்றார்.

மற்றுமொரு சகோதரரது கவலை வேறொரு வடிவில் வெளிப்பட்டது. ஒருவர் தொழிலை திறன்பட நிறைவேற்றுவதற்காக நேரம் ஒதுக்கினால் அதுகூட இபாதத்தாக மாறிவிடுகின்றது. ஆனால், எம்மில் பலர் தொழில் நேரத்தினை விடவும் பணம் தேடுவதில்தான் குறியாக இருக்கின்றார்கள். இதனால் பல சமயங்களில் அவர்களது தொழில் இபாதத்தாக மாறுவது எப்படியிருப்பினும் ஹராமாய் மாறிவிடும் அபாயம்கூட இருக்கிறது என்றார்.

இந்த சம்பவப் பின்புலம் ஒரு முக்கிய உண்மை குறித்து சிந்திக்கத் தூண்டுகின்றது. தொழில் என்பது எமது வாழ்வின் குறிப்பிடத்தக்களவு நேரத்தை தவிர்க்க முடியாமல் எடுத்து விடுகிறது. இது தஃவாவில் பெரியளவு பாதிப்பு செலுத்துவதாகத்தான் பலரும் கருதுகின்றார்கள். அதிலும் குறிப்பாக சகோதரிகள் தொழில் செய்யும் நிலை தற்போது அதிகரித்து வருகிறது.

எனவே, ஒரு முஸ்லிம் சகோதரிக்கு முன்னால் உள்ள கடமைகளில் தான் செய்யும் தொழில் என்பதும் பேசப்பட வேண்டிய ஒரு முக்கிய தலைப்பாகக் காணப்படுகின்றது. முஸ்லிம் பெண்கள் தொழில் செய்யலாமா? அது

வும் வீட்டை விட்டு வெளியில் சென்று செய்கின்ற தொழிலை அங்கீகரிக்கலாமா? என்ற வாதப் பிரதிவாதத்தில் ஈடுபட நாம் நினைக்கவில்லை. உண்மையில் இது பெரும் வாதப்பிரதிவாதங்கள் நிறைந்த தலைப்புதான். இருந்தபோதிலும் வாதாட்டம் என்ற ஒன்று இருப்பதுவே, அதில் அனுமதிக்கப்பட்ட ஒரு பக்கம் காணப்படுகின்றது என்பதை சொல்கிறது. எனவே, ஷரீஆவில் அனுமதியுள்ளது என்ற அடிப்படையில் நின்றுதான் இங்கு தொழிலும் தஃவாவும் என்ற தலைப்பு பேசப்படுகின்றது.

ஆனால், ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு பெண்ணின் அடிப்படையான கடமை அவளது வீட்டுக்கு உள்ளேதான் காணப்படுகின்றது என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. அதனால்தான் பெண்கள் தொழில் செய்வதை அனுமதித்தவர்கள் கூட அந்த தொழில் அவளது அடிப்படைக் கடமைகளில் குறைபாட்டை ஏற்படுத்துவதாய்க் காணப்படக்கூடாது என்று குறிப்பிடுவார்கள். அதனோடு இணைந்த வகையில் இன்னும் இரண்டு நிபந்தனைகளையும் குறிப்பிட்டுள்ளனர். ஒன்று, செய்யும் தொழில் ஷரீஆவிற்கு முரணில்லாததாகக் காணப்படல் வேண்டும். மற்றையது, ஷரீஆ பெண்ணுக்கு வரையறை செய்த ஒழுக்கங்களைப் பேணிக் கொள்ளல் வேண்டும்.

இஸ்லாம் உழைத்து சம்பாதித்தலை வலியுறுத்துகிறது. அது சுய தொழிலாக இருக்கலாம் அல்லது உத்தியோகமாகவும் இருக்கலாம். ஆனால், அங்கே நேர்மையும் உண்மையும் காணப்படல் வேண்டும். அசத்தியமும் ஏமாற்றும் காணப்படக் கூடாது என்பதை ஷரீஆ வலியுறுத்துகின்றது. இதனைத்தான் அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது; ''ஈமான் கொண்டவர்களே, அநியாயமான வழிகள் மூலம் உங்களுக்கு மத்தியில் செல்வத்தை சம்பாதிக்காதீர்கள்'' (நிஸா: 29) நபியவர்கள் கூறினார்கள்; ''ஏமாற்றாதீர்கள். ஏமாற்றுகின்றவர்கள் எம்மைச் சார்ந்தவர்களல்லர்''.

தொழிலில் ஒருபுறம் உண்மையையும் நேர்மையையும் பேசிய இஸ்லாம் மற்றொரு புறம் தொழில் நேர்த்தியையும் வினைத்திறனையும் பற்றிப் பேசுகிறது.

நபியவர்கள் கூறினார்கள்; ''அல்லாஹுத்தஆலா அனைத்து விடயங்களிலும் நேர்த்தியை வினைத்திறனை (இஹ்ஸான்) விதியாக்கியுள்ளான்...''. மற்றுமொரு சமயம் ''நீங்கள் ஒரு வேலையைச் செய்தால் அதனை திறன்பட நிறைவேற்ற வேண்டும் என்பதையே அல்லாஹுத்தஆலா விரும்புகிறான்'' என்றார்கள்.

இந்த ஹதீஸ்களில் பயன்படுத்தப்பட்டுள்ள ''இஹ்ஸான், இத்கான்'' போன்ற சொற்பிரயோகங்கள் நவீன முகாமைத்துவ கோட்பாடுகளின் பயனுறுதி, வினைத்திறன் போன்ற விடயங்களைப் பிரதிபலிப்பதாகவே காணப்படுகின்றன.

எனவே, ஒரு செயலில் உண்மையும் நேர்மையும் அந்த செயலுக்குரிய உரிமையை வழங்குகின்றபோதுதான் பிரதிபலிக்கும். உரிமையை வழங்குதல் என்றால், அந்த செயலுக்கு வழங்கப்பட வேண்டிய நேரத்தை வழங்க வேண்டும். செலுத்தப்பட வேண்டிய முயற்சி செலுத்தப்பட வேண்டும், அந்த செயலின் ஊடாக எதிர்பார்க்கப்படும் விளைவு அடையப் பெற வேண்டும். அங்கு எதுவும் வீணடிக்கப்பட்டிருக்கக் கூடாது. இது தான் உரிமை வழங்குதல் என்பது. இப்பொழுதுதான் இங்கு உண்மையும் முரண்மையும் பிரதிபலிக்கும். இப்பொழுதுதான் இங்கு இஹ்ஸானும் இத்கானும் பிரதிபலிக்கும்

**இஸ்லாம் உழைத்து**
**சம்பாதித்தலை வலியுறுத்துகிறது.**
**அது சுய தொழிலாக**
**இருக்கலாம் அல்லது**
**உத்தியோகமாகவும்**
**இருக்கலாம். ஆனால், அங்கே**
**நேர்மையும் உண்மையும்**
**காணப்படல் வேண்டும்.**
**அசத்தியமும் ஏமாற்றும்**
**காணப்படக் கூடாது என்பதை**
**ஷரீஆ வலியுறுத்துகின்றது.**

நாம் ஆரம்பத்தில் கூறிய அந்த சம்பவத்தில் இரண்டாம் சகோதரரது கவலை இதனைச் சுற்றித்தான் சுழன்றது. அங்கே உரிய நேரம் கொடுக்கப்படுவதில்லை. அல்லது விளைவை அடையும் வகையில் தொழில் பார்க்கப்படுவதில்லை. இந்தத் தவறுகள் எல்லாம் தஃவாவை நியாயமாகக் கொண்டு முன்னிறுத்தி நடைபெறுவது அதைவிட பெரிய தவறாகும். இமாம் ஹஸனுல் பன்னா பற்றிய ஒரு உதாரணத்தை அடிக்கடி கேள்விப் பட்டிருக்கிறோம். அவர் இரவு முழுவதும் தஃவாவுக்காக உழைத்த போதிலும்கூட மறுநாள் பாடசாலையில் முதலாவதாக ஒப்பம் வைப்பவராக அவர்தான் இருந்திருக்கிறார்.

கடந்த பல பத்திகளில் நாம் வலியுறுத்திய ஒரு உண்மையை மீண்டும் ஞாபகமூட்டல் பொருத்தம் எனக் கருதுகிறோம். எம்மில் பலர் தஃவாவை சமூக வாழ்வுடன் சம்பந்தப்படாத தனியான நிகழ்ச்சி நிரலாகப் பார்க்கின்றனர். இந்தப் பார்வை தவறானது. தஃவாவும் சமூக வாழ்வும் இருவேறு களங்களல்ல. சமூக வாழ்வின் எவ்வகைக் களங்களும் எமக்கு தஃவாவுக்குரிய களங்கள் தான். எனவே, சமூகத்தின் எந்த இடத்திலும் எனது செயற்பாடு தஃவாவாகக் காணப்படல் வேண்டும். அங்கு நான் ஒரு தாஈயாகத் தோற்றமளிக்க வேண்டும்.

தொழில் செய்யும் இடத்தில் தஃவா என்பது, வெறுமனே அந்த இடத்தில் உள்ளவர்களை எனது தஃவாவுடன் சம்பந்தப்படுத்துவது மாத்திரமல்ல. அத்துடன் எனது தொழிலை திறன்பட நிறைவேற்றுவதும், தொழிலில் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்வதும் தஃவா தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இஸ்லாமிய தஃவா என்பது இஸ்லாமிய வாழ்க்கையை உருவாக்கும் செயற்பாடு. எனவே, எமது சமூக வாழ்வில் ஒவ்வொரு செயற்பாட்டையும் இஸ்லாம் எதிர்பார்க்கும் வடிவில் செய்தல் வேண்டும். அப்போது அதுவும் தஃவாவாக மாறுகிறது. நாம் செய்யும் தொழிலும் இத்தகையதுதான் அங்கு நான் நேரத்தைப் பேணவில்லை எனின், பாடசாலையில் பாடத்திட்டத்தைப் பூரணப்படுத்தவில்லை எனின், எனக்கு தரப்பட்ட இலக்கை அடையவில்லை எனின் அடுத்தவர்களுடன் நல்லுறவைப் பேணவில்லை எனின், நான் யாரையும் மதிக்கவில்லையெனின், என்னையும் யாரும் மதிக்கவில்லையெனின் நான் எந்த தஃவாவை பிரதிநிதித்துவப் படுத்தி என்ன பயன்?

இங்கு இதனுடைய எதிர்மறை வடிவம் ஒன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். தொழிலைக் கட்டிக் கொண்டு தஃவாவை மறந்து போதலும் சமநிலையற்ற நிலையாகும். தொழிலுக்கு உரிய நேரத்தை வழங்குதல் என்பது தான் உரிமையும், ஷரீஆவும் ஆகும். மாற்றமாக அளவுக்கதிகமான நேரத்தை வழங்குவதல்ல. இந்த இடத்தில் அல்குர்ஆன் தரும் வழிகாட்டலைப் பாருங்கள்; ''ஈமான் கொண்டவர்களே, வெள்ளிக்கிழமை தொழுகைக்காக அழைக்கப்பட்டால் உங்கள் வியாபாரத்தை விட்டுவிட்டு அதற்காக விரைந்து செல்லுங்கள். தொழுகையை நிறைவேற்றி முடிந்துவிட்டால் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள். *(ஜும்ஆ: 10)*

இங்கு தொழிலை அனுமதித்த இஸ்லாம், அதனைக் காரணமாக வைத்து அல்லாஹ்வுக்குரிய கடமைகளில் குறைபாடு செய்யக் கூடாது என்கிறது. அத்துடன் பாரம் கூடியதாக அமைய வேண்டியதும் அல்லாஹ்வுக்குரிய கடமைதான். இஸ்லாமிய தஃவாவும் அல்லாஹ்வுக்குரிய கடமைகளில் ஒன்று. எனவே, எமது உள்ளங்களில் என்றும் தஃவா பாரம் பொருந்தியதாகக் காணப்படல் வேண்டும். அந்தப் பாரத்தை தொழில் வென்றுவிடக் கூடாது.

இறுதியாய், தொழில் புரியும் சகோதரிகளுக்கு சில வார்த்தைகள்; உங்கள் தொழில் ஷரீஆவிற்கு உட்பட்டதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். தொழிலில் தேர்ச்சி பெறுங்கள். உரிய நேரத்திற்கு சமூகம்தாருங்கள். கடமையில் உண்மையாய் உழையுங்கள். அப்பொழுது தான் பெறும் சம்பளம் ஹலாலாக அமையும். நேரத்தை வீணடிக்காதீர்கள். ஹிஜாபைப் பேணிக் கொள்ளுங்கள். அறிந்துகொள்ளுங்கள், தொழிலில் சக ஆண் ஊழியர்கள் ஒருபோதும் மஹ்ரமியாக மாட்டார்கள். எனவே, பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுங்கள், தனித்திருக்கும் சந்தர்ப்பத்தை ஒருபோதும் ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள்.

சகோதரிகளே, மனங்கொள்ளுங்கள், நீங்கள் தொழில் செய்தாலும் செய்யாவிட்டாலும் வீட்டின் கடமைகள் உங்களுக்குரியவைதான். அவற்றிலே குறைபாடு செய்யாதீர்கள். உங்களது தொழில் களைப்பின் விளைவாக கணவனின் முன்னாலும் பிள்ளைகளின் முன்னாலும் முகம் சுழிக்காதீர்கள்.

அறிந்துகொள்ளுங்கள், தஃவா முற்படுத்தப்பட வேண்டியதுதான். அதன் பொருள் தொழிலில் எனது கடமையை செய்யாதிருப்பது அல்ல. தஃவாவை காரணம்காட்டி அடிக்கடி விடுமுறை எடுக்காதீர்கள். மேலதிகாரிகளுக்கு வெறுப்புக்குரிய விடயமாய் தஃவா மாறிவிடும். தஃவாவும் தொழிலும் முரண்படுகின்ற போது இரு தரப்பினருடனும் தெளிவாகப் பேசுங்கள். ஒன்றை விட்டுத்தான் மற்றையதை செய்ய வேண்டும் என்பதில்லை. முடிந்தவரை இரண்டையும் செய்யும் வழி பற்றி சிந்தியுங்கள். முன்மாதிரியாக இருங்கள். அடுத்தவர்களை கௌரவப்படுத்துங்கள். உங்கள் வேலைத்தளத்தில் 'நம்பர் வன்' என்ற பெயரைப் பெறுங்கள். உங்களுக்கு முன்னால் எல்லா வாயில்களும் விசாலமாய்த் திறந்து கொள்ளும். அல்லாஹ் எம்மை அங்கீகரிக்கட்டும்.


**உங்களுக்குத் தேவையான புத்தகங்கள், சஞ்சிகைகள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், VCD, DVD க்கள், போன்ற அனைத்தையும் நியாயமான விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ள மத்திய கொழும்பில் நீங்கள் நாடவேண்டிய இடம்**



**The Reader BOOKSHOP**

No, 15, Smith Lane, Meeraniya Street,
Colombo 12
T.P: 0773 467487

# குழந்தைகள்

## அழகு, சிரிப்பு, மழலை, மென்மை, சிணுங்கல்...

சில்லென்ற குளிர்காலம், மனதோடு உரையும் பனிக்காலம், மலர்கள் துளிர்விடும் வசந்தகாலம், கதைகள் பேசும் கனா காலம், நினைவுகள் மீட்டும் நிலாக்காலம் எம் எல்லோர் உள்ளங்களும் ரசிக்கும் பொற்காலம்... அது தான் குழந் தைப் பருவம்.



இறைவனின் விலை மதிக்க முடியாத அருட் கொடைகள், சுவன முத் துக்களின் மறு விம் பங்கள் குழந்தைகள். பூக்களோடு கதை பேசும் இளம் கீற்றுக் கள்... கருவறை சுவர்க ளில் இறைவன் நேர்த்தி யாய்த் தீட்டும் ஓவியங்களாய் தாயின் குருதியால் கருவறையில் செதுக்கப் படும் கல்வெட்டுக்களாய் இவர்கள் பரி ணமிக்கிறார்கள். இவர்கள் இளங் காலைப்பொழுதின் இதமான தூறல் களாய் எல்லோர் வாழ்விலும் இடம்பிடிக்கிறார்கள்.

எல்லோருக்கும் குழந்தைகள் என் றால் கொள்ளை ஆசை. குழந்தைகளை விரும்பாதவர்கள் யாருமில்லை என லாம். அவர்களின் சிரிப்பில், மென்மை யில், மழலை கொஞ்சும் வார்த்தையில், பிஞ்சுப் பாதத்தின் அசைவில், சினுங்கலில் அனைவரையும் கவர்ந்துவிடுகிறார்கள். இவர்கள் இல்லாத வாழ்வு வெறுமையின் இருப்பிடமாக மாறிவிடுகின்றது. எம் வாழ்க்கைப் புத்தகத்தின் முக வுரை இவர்களால்தான் எழுதப்படுகிறது. எம் வாழ் வின் அர்த்தங்கள் இவர்களால்தான் மொழிபெயர்க் கப்படுகிறது. எம் வாழ்க்கைக் காலங்கள் இவர்க ளைக் கொண்டுதான் உயிர்ப்பெறுகிறது. ஏன் பெண் மையும் ஆண்மையும் நிரூபிக்கப்படுவது இவர்கள் மூலம்தான். குழந்தை இல்லாதவர்களிடம் கேட் டால் தெரியும் வாழ்க்கையின் வலிகள்.

குழந்தைகள் இறைவன் எமக்களித்த அமானிதங் கள். கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளங் கொண்ட வர்கள். இறைவன் அளித்த சிற்ப மூலங்கள். அதை அழகிய சிற்பமாக, ஓவியமாக செதுக்குவது பெற்றோ ரின் கையில்தான் இருக்கிறது. ஒரு மனிதனின் நாளைகள் தீர்மானிக்கப்படுவது இப்பருவத்தில் தான்.

குழந்தைகளை உருவாக்குவதில் தாயின் பண்பே பிரதானமானது. குழந்தைகள் இளம் வித்துக்கள் போன்றவர்கள். பொருத்தமான இடத்தில் பயிரிட்டு, அழகிய முறையில் பராமரித்து, நல்ல விளைச்சல் களாக மாற்ற முடியும். பொருத்தமற்ற இடத்தில் தூவி அதை அழுகச் செய்து அழிந்து போகவைக்கவும் முடியும். இதன் அடிப்படை பெற்றோரின் கையில் தான் நிலைகொண்டிருக்கிறது.

இதனால்தான் றஸூல் (ஸல்) அவர் கள் கூறினார்கள்;



''எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கும் போது முஸ்லிமாகத் தான் பிறக்கிறது. அதை யூதனாகவும், கிறிஸ் தவனாகவும் மாற்று வது பெற்றோரின் வளர்ப்பிலேயேதான் இருக்கிறது''

எனவே, ஒரு குழந் தை நல்லவனாக உருவாவ தும், கெட்டவனாக மாறிவிடு வதும் பெற்றோரின் கையில்தான் உள்ளது. உலகின் சாதனைமிக்க வரலாற்றுப் பக்கங்களில் இடம்பிடித் தவர்கள் எல்லாம் குழந்தைப் பருவத்தில் இருந்து நெறிப்படுத்தப்பட்டவர்கள் தாம். இவர்கள் தாயின் கருவறையில் இருந்து பயிற்றுவிக்கப்பட்டவர்கள். தாயின் நுணுக்கமான அசைவிலும், உயர்ந்த சிந் தனையிலும், பரந்த மனப்பாங்கிலும் கச்சிதமாய் உரு வாக்கப்பட்ட சிற்பங்களாய்த் திகழ்ந்தார்கள்.

தாயின் ஆளுமைப் பண்பும், தாயின் பொறுப்புணர்ச்சியும் பரிசீலிக்கப்படுவது குழந்தைகள் அவர்களின் வாழ்வில் தடம் பதிக்கும்போதுதான். இப்பருவத்தில் அவர்களுக்கு ஊட்டப்படும் விடயங்கள்தான் அவர்களின் இறுதி மூச்சுவரை நிலைபெறப் போகிறது என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளின் வாழ்க்கைப் புத்தகத்தின் ஆரம்பப் படிவங்கள் வெற்றுப் பக்கங்களாகவே இருக்கிறது. அதில் பொன் எழுத்துக்கள் கொண்டு வரலாற்றுப் பக்கங்களையும், சாதனைகளின் அஸ்திவாரங்களையும் வரைய முடியும். கோடுகள், கோணங்கள், கிறுக்கல்கள் போட்டு நாசமாக்கவும் முடியும். இதில் நல்ல பக்கங்களை உருவாக்குவதில் பெற்றோர்தான் அடிப்படை.

குழந்தைகள் தளிர்க்கும் போதே அதற்கு நேர்ப் பக்கங்கள் இனங்காட்டப்பட வேண்டும். எதிர்ப்பக்கங்கள் எச்சரிக்கப்பட வேண்டும். குழந்தைப் பருவத்தில் இருந்தே நல்ல ஒழுக்கங்கள், நல்ல பண்பாடுகள் விதைக்கப்பட வேண்டும். மனப்பான்மைகளின் விரிவாக்கம், சிந்தனைகளின் தூரதரிசனம் என்பன இப்பருவத்தில் இருந்தே முளைப்பிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையும் பெற்றோரின் கையில்தான் உள்ளது.



வெற்றுப் பார்வைகள் தவிர்த்து இலட்சியப் பார்வைகளும், பகல் கனவுகள் மறந்து இலட்சியக் கனவுகள் காணவும், இளம் துடிப்புகள் சமூக முன்னேற்றத்திற்கும், நாளைகளின் வெற்றிக்கும் அடித்தளமாய் மாற்றப்படவும் வேண்டும். கண்ணீரின் சுவை, வலிகளின் சுகம், துன்பத்தின் தோரணை, வாழ்க்கையின் யதார்த்தம் என்பன இப்பருவத்தில் இருந்தே உணர்த்தப்பட வேண்டும்.

தாய்மையின் தூய்மையான அன்பில் குழந்தையில் உறுதியான உள்ளமும், தந்தையின் அதீத அக்கறையில் குழந்தையில் உயர்ந்த தன்னம்பிக்கையும் ஏற்படுத்த முடியுமெனில் சோர்ந்து விழும்போது தாயின் அரவணைப்பால் தூக்கவிடவும், தவறுவிடும்போது தந்தையின் வழிகாட்டலினால் நெறிப்படுத்தவும் முடியுமெனில்... சாதனைத் தலைவர்கள் பூமிப் பந்தில் கால்பதிப்பது உறுதியாகலாம்.

குழந்தைகளின் உள்ளம் மென்மையானது. இதில் சடத்துவத்தின் இறுக்கங்கள் அடியோடு அழிக்கப் பட வேண்டும். இதில் மென்மையின் சாரல் கொண்டே இதப்படுத்த வேண்டும். இறைவன் பற்றிய சிந்தனை, அவன் படைப்பின் மகத்துவம் பற்றிய சிந்தனை, அவன் அருள்கள், அவன் அன்பின் ஆழம் பற்றிய சிந்தனையை பிஞ்சு உள்ளத்தில் பதிக்க வேண்டும். அப்போதுதான் வீண் சிந்தனைகள் அந்தப் பிஞ்சு உள்ளத்தை ஆக்கிரமிப்பதில் இருந்து பாதுகாக்கலாம். இதுவும் பெற்றோரின் கையில்தான் உள்ளது.

சத்தியத்தின் பலத்தால், ஈமானிய வலிமையால், உண்மையின் உருவாக்கத்தால் இந்த பிஞ்சு உணர்வுகள் நெறிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் ஆளுமைகள் வளர்க்கப்பட வேண்டும். திறமைகள், ஆற்றல்கள் வளர்க்கப்பட வேண்டும். எதிர்மறைப் பண்புகள் இனங்காணப்பட்டு முளையிலேயே கிள்ளி எறியப்படுவதோடு நேர்ப் பண்புகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சிந்தனைப் புயல்களாய், செயல் வீரர்களாய் புடம் போடப்பட வேண்டும். இதுவும் பெற்றோரின் கையில்தான் நிலை கொண்டுள்ளது.

இயற்கையை ரசிக்க, வார்த்தையில் இனிக்க வைக்க, புன்னகையால் உறவாட, பண்புகளால் கவர பழக்கப்பட வேண்டும். சுயநலம் மறந்து பொது நலம் நோக்கவும், வரையறைகளை தாண்டாமல் உலக வெளிகளைப் புரட்டப் பழக்க வேண்டும்.

பெற்றோர்களின் சீரீய அடித்தளம்தான் குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க வழிவகுக்கும். பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளையும் உருவாக்குங்கள். ஒரு தனிமனிதன் வாழ்வதற்காக அல்ல. உங்கள் குழந்தை ஒரு சமூகத்தை உருவாக்கும் வகையில்.



சாதனைச் சமூகம் துளித்தெழ... எம் குழந்தைகளையும் முதலீடாக்கலாம்.

**ஸகீயா ஹம்தூன்**
**இஸ்லாஹிய்யா வளாகம்**




## நபியே உம்மிடம் அழகிய முன்மாதிரிகள் இருக்கின்றன

அஸ்ஸலாமு அலைக்கும் அன்புச் செல்வங்களே!

அருள் நிறைந்த ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று பெருநாளையும் கொண்டாடிய மகிழ்ச்சியில் நீங்கள் எல்லோரும் இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். மிகுந்த உற்சாகமும் குதூகலிப்பும் உங்கள் எல்லோரிடமும் தெரிகிறது. அன்புச் செல்வங்களே! கடந்த ரமழான் மாதத்தில்; நாம் அதிகமாக நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ள வேண்டும், அவரை எங்களை விடவும் அதிகமாக நேசிக்க வேண்டும், அவர்மீது அதிகம் ஸலவாத்துச் சொல்ல வேண்டும் என்பதை கற்றிருக்கிறோம்.

அன்புக் குழந்தைகளே! இம்முறை நபி (ஸல்) அவர்கள் தனது இளமைக் காலத்தில் கலந்து கொண்ட ஒரு முக்கியமான நிகழ்வைப் பார்ப்போம். அதுதான் 'ஹில்புல் புளூல்' என்ற உடன்படிக்கையாகும்.

ஒருமுறை ஒரு யெமன் நாட்டு மனிதர் மதீனாவிற்கு வியாபார நோக்கமாக வந்தார். அவரிடம் பொருட்களை வாங்கிய மக்கா நகர செல்வந்தர் ஒருவர் பணம் கொடுக்க மறுத்துவிட்டார். எனவே, அந்த வியாபாரி மக்கா பிரமுகர்களிடம் நியாயம் வேண்டி தனது பணத்தைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

பிரச்சினையை அறிந்த மக்காவின் பெரியவர்கள் ஒன்றுகூடி இனிமேல் இப்படி ஒரு சம்பவம் நடக்காமலிருக்கவும் அவ்வாறு யாராவது பாதிக்கப்பட்டால் அவர் களுக்கு உதவும் ஒரு உடன்படிக்கையை செய்தனர். அதுதான் 'ஹில்புல் புளூல்' ஆகும். இதில் நபி (ஸல்) அவர்களும் கலந்து கொண்டார்கள். அதற்கு காரணம் அவர் அநீதி யிழைக்கப்பட்டோர், ஏழைகள், பலவீனர்களுக்கு உதவும் மனம் கொண்டிருந்தமையா கும்.

பாருங்கள் குழந்தைகளே! இளம் வயதிலேயே நபி (ஸல்) அவர்கள் ஏனையவர் களுக்கு உதவி செய்வதில் முன் நின்றார்கள். அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கு சார்பாக இருந்திருக்கிறார்கள். நாமும் எமது நபியைப் பின்பற்ற வேண்டும். பலவீனர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும். அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சரி தம்பி தங்கையரே! அடுத்த இதழில் நபி (ஸல்) அவர்களின் இளமைப் பருவத்தில் நடந்த இன்னொரு சுவாரஷ்யமான சம்பவத்துடன் சந்திப்போம் இன்ஷா அல்லாஹ்.

# நிறம் தீட்டுவோம்...

'நிறம் தீட்டுவோம்' என்ற இந்தப் பகுதி தரம் 03 மற்றும் அதற்குக் கீழ் வகுப்புகளில் கல்வி கற்கின்ற சிறிய மாணவ, மாணவிகளுக்கானது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

கீழே தரப்பட்டுள்ள படத்தை போட்டோ பிரதி (Photo copy) எடுத்து உங்கள் எண்ணம்போல் நிறந்தீட்டி, ஒக்டோபர் 30 ஆம் திகதிக்கு முன்பதாக எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கிறது.







ஒரு முதியவர் தனக்கு மரணம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்தார். அவர் தனது மூன்று மகன்களையும் அழைத்து அவர்களுடைய வாழ்க்கைக்கு பிரயோசனமளிக்கும் சில விடயங்களை உபதேசித்தார்.

அவர், அவர்கள் மூவருக்கும் ஒரு விறகுக் கட்டைக் கொடுத்தார். பின்னர் அவர்கள் ஒவ்வொருவரிடமும் அதனை தனியாக உடைக்குமாறும் வேண்டினார். அவர்கள் ஒவ் வொருவராக அதனை உடைப்பதற்கு முயற்சித்தனர். ஆனால், அவர்களால் அதனை உடைக்க முடியவில்லை.

முதியவர் விறகுக் கட்டை எடுத்து விறகுகளைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்தார். பின்னர் தனது மகன்களிடம் அவற்றைக் கொடுத்து உடைக்குமாறு வேண்டினார். இப்போது அவர்கள் மிக இலகுவாக ஒவ்வொரு விறகையும் உடைத்தார்கள்.

அப்போது அந்த முதியவர் தனது மகன்மாரிடம் நீங்கள் அனைவரும் இந்த விறகுக் கட்டைப் போன்றவர்கள். நீங்கள் ஒன்றுப்பட்டு ஒரே கையாக இருந்தால் உங்களுடைய சக்தி அதிகமாக இருக்கும். நீங்கள் பிரிந்தால் பலவீனமாகிவிடுவீர்கள். உங்களுடைய எதிரிகள் உங்களை வென்றுவிடுவார்கள். எனவே, எனது அன்பு மகன்களே! நீங்கள் பரஸ்பரம் ஒத்துழைப்புடன் நடந்து கொள் ளுங்கள் என்று கூறினார்.

## ஒற்றுமையாக வாழ்வோம்



# அழகிய முன்மாதிரி

நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் ஒரு பயணம் சென்றார்கள். அவர்கள் சாப்பிடுவதற்காக ஒரு ஆட்டை அறுப்பதற்கு விரும்பினார்கள். எனவே, அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைப் பொறுப்பெடுத்துக் கொண்டார்கள்.

முதலாமவர் கூறினார்; நான் ஆட்டை அறுக்கின்றேன்.


இரண்டாமவர் கூறினார்; நான் அதனை சுத்தப்படுத்துகின்றேன்.

மூன்றாமவர் கூறினார்; நான் அதனை சமைக்கின்றேன்.

நபி (ஸல்) அவர்கள், அவர்களுடன் வேலையில் பங்கெடுப்பதற்கு விரும்பினார்கள். எனவே, அவர் 'நான் விறகு சேர்த்து வருகின்றேன்' என்றார்கள்.

உடனே ஸஹாபாக்கள் 'எங்களுக்கு எல்லா வேலைகளையும் செய்ய முடியும் றஸூலுல்லாஹ்' என்றார்கள்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் 'உங்களால் செய்ய முடியும் என்பதை நான் அறிவேன். என்றாலும், நான் உங்களை விட மேலானவனாக இருக்க விரும்பவில்லை. அல்லாஹுத்தஆலா தனது தோழர்களை விட தான் சிறந்தவர் என நினைக்கும் அடியானை விரும்புவதில்லை' என்றார்கள்.








# அன்பு செலுத்துவோம்


ஒருநாள் ஸஹாபாக்கள் ஒரு புறா அதன் இரு சிறு குஞ்சுகளோடு இருப்பதைக் கண்டார்கள். அவர்கள் அந்தக் குஞ்சுகளை நோக்கி, விரைந்து சென்று அவற்றை எடுத்துக் கொண்டார்கள். அந்தப் புறா அவர்களுக்கு மேலால் வானத்தில் சிறகடித்துக் கொண்டிருந்தது. அது அவர்கள் தனது குஞ்சுகளை விட்டுவிடுவார்கள் என எதிர்பார்த்தது.

நபி (ஸல்) அவர்கள், புறா ஸஹாபாக்களுக்கு மேலால் வானத்தில் பறந்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். அதனுடைய உள்ளம் தனது குஞ்சுகளை இழந்ததால் மிகவும் கவலையடைந்திருந்தது.

அப்போது நபி (ஸல்) அவர்கள்; 'யார் அதனுடைய குஞ்சுகளைப் பிரித்தது? அதனுடைய குஞ்சை அதற்கு வழங்கிவிடுங்கள்' என்று கூறினார்கள்.

ஸஹாபாக்கள் இரண்டு குஞ்சுகளையும் சுதந்திரமாக விட்டார்கள். புறா தன் இரண்டு குஞ்சுகளையும் சந்தோசத்தோடு அதனது கூட்டிற்கு எடுத்துச் சென்றது.

# குறுக்கெழுத்துப் போட்டி




**இடமிருந்து வலம்**

1. இதனைக் கொண்டு எழுதுவீராக.
4. இரவில் விழித்தெழுந்து தொழும் ஸுன்னத் தொழுகை. (ஐந்து எழுத்துக்கள்)
5. இந்நகரில்தான் மஸ்ஜிதுல் அக்ஸா அமைந் துள்ளது.
7. இதனை நோக்கி நாம் தொழுகிறோம்.

**மேலிருந்து கீழ்**

1. நிய்யத் என்பதன் கருத்து.
2. இன்பம் என்பதன் எதிர்கருத்து.
3. இது இறுதிக் கடமை.
6. இந்தியாவின் நாணய அலகு.

## குறுக்கெழுத்துப் போட்டி 03 முடிவுகள்

01. எம்.ஏ.எம். அஹ்ஸன் - அலவத்துகொட.
02. இமாரா ஷபீக் - மாத்தறை.
03. ரிஸானா கரீம் - பாலாவி.

அப்துல் பாஸித் - வெலிகம. / ரஸீன் அஹமட் - மாத்தறை / முஹம்மத் ஷமீ - கெக்கிராவ. / ஆயிஷா நுஸ்கா - கல்எளிய. / எம்.எச். ரம்லா - வரக்காபொல / ஏ.எம். நஸார் - கிண்ணியா / ஸஆமா ரிபாய் - கெலிஓய.

## 'நிறம் தீட்டுவோம்' போட்டி முடிவுகள்

01. பாத்திமா ஸஜா
கிண்ணியா.

02. பாத்திமா ஹிக்மா
அக்குறணை.

03. இல்முன் நிஸா
அக்குறஸ்ஸ.

நளீம் மிப்ரின் – தம்பலகாமம், இல்மா வஸீம் – கண்டி, நஹ்தா நபீல் – புத்தளம், பாத்திமா ஹனா – கலகெதர, கே.எம். ஆகில் – பரகஹதெனிய, ஏ.என். ஸைமா – கல்எளிய

கடந்த வைகறை இதழ்களில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகள் நவம்பர் இரண்டாம் வாரத்திற்குள் அனுப்பி வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதழ் 16 இல் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் தமது முகவரிகளை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

நான் உயிருள்ளவனா? அல்லது மரணித்தவனா? என எம்மில் ஒவ்வொருவரும் அடிக்கடி எம் உள்ளத்திடம் இந்தக் கேள்வியை கேட்டுக் கொள்வது அவசியமாகும். சிலவேளை மரணித்தவர்களாக இருப்பதை நாம் அறியாமல் இருப்போம். உண்மையில் உலகத்தில் மனிதர்கள் உண்டு, குடித்து, விளையாடி தன் காலத்தை கொண்டு செல்வது தான் உயிருள்ள மனிதர்களுக்கான அடையாளம் என நினைத்துக் கொண்டிருப்பதே ஆச்சரியப்பட வேண்டியதொன்றாகவுள்ளது. இதுவே மக்களின் யதார்த்தமாகவும் உள்ளது. உலகில் பலர் உயிருள்ளவர்கள் என்ற பெயரில் மரணித்தவர்களைப் போன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உயிருள்ள இவர்கள் ஏன் மரணித்தவர்கள் என குறிப்பிடப்படுகிறார்கள் என சிந்திப்போமானால் இவர்களுடைய உள்ளங்கள் மரணித்துக் கிடக்கின்றன.

பின்வரும் குர்ஆன் வசனத்தை நோக்குங்கள்; ''உயிருடன் இருப்பவருக்கு (அதைக் கொண்டு) அவர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும் (குர்ஆன் அருளப்பட்டது)'' (ஸூறா யாஸீன் 70) எனவே, அல்குர்ஆனின் போதனைகள் உயிருள்ள உள்ளத்தைப் பெற்றோர்களுக்கே பயனளிக்கும் எச்சரிக்கையாக இருக்கும் என்பதை மேற்கூறிய வசனம் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். உயிருள்ள உள்ளத்தைப் பெற்றவனுக்கே ஈருலகிலும் வெற்றிபெறலாம். பின்வரும் விடயங்கள் உன்னிடத்தில் காணப்பட்டால் நீயும் உயிருள்ளவன்.

★ நீ எச்சந்தர்ப்பதிலும் அல்லாஹ்வுக்குப் பயந்து வாழப் பழகிக் கொள்.

★ நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்.

★ எந்த வெறுக்கப்பட்ட, தீய காரியங்களையும் என்னை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வினால் அவற்றை நிறைவேற்ற வெட்கப்பட்டு விலகிக்கொள்.

★ அல்லாஹ்வை நினைவுகூர்வதைக் கொண்டு நாவு நனைக்கப்பட்டால் அப்பொழுது உள்ளங்கள் உயிருள்ளனவா? மரணித்தவையா என நாமே முடிவெடுக்கலாம்.

மேலும் ''பின்வரும் மூன்று விடயங்களில் உன் உள்ளத்தைத் தேடு,

1. அல்குர்ஆன் ஓதுவதைக் கேட்கும்போது.
2. திக்ர் மஜ்லிஸ்களில்.
3. தனிமையாக இருக்கும்போது.

இவ்விடயங்களில் நீ காணாவிட்டால் அல்லாஹ்விடம் ஒரு உள்ளத்தைத் தருமாறு கேள். ஏனெனில், ''உனக்கு உள்ளமே இல்லை'' என்ற இப்னு மஸ்ஊத் (றழி) அவர்களின் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

எனவே, எப்போதும் எமது உள்ளங்களை ஈமானிய ஒளியில் பிரகாசிக்கச் செய்து உயிருள்ள உள்ளங்களாக நிலைக்கச் செய்வோம்.



# இலக்கு

மூலம்: நஜீப் அல் கைலானி

தமிழில்: பாஸிரா மைந்தன்



நாங்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்த ஆரம்பப் பாட சாலை எமது கிராமத்திலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திலிருந்தது. நாம் அந்தப் பாடசாலைக்கு நடந்து சென்று நடந்தே திரும்பி வருவோம். நாம் பாதையில் செல்லும்போது பாடல்களைப் பாடிக்கொண்டும் போட்டியிட்டுக் கொண்டுமே செல்வோம். எம்மோடு வருகின்ற முஹம்மத் அல் ஹத்தாத் வித்தியாசமானவன்.

அவன் பாதையில் மௌனமாகவும் ஒழுக்கமாகவும் செல்வதைக் கண்டோம். அவன் பாடசாலைப் பாடல் களை பாடுவதிலோ அல்லது எங்கள் உரையாடல்களிலோ கலந்துகொள்ள மாட்டான். பாதையில் ஒதுங்கியே செல்வான். நீல வானத்தைப் பார்ப்பான், பச்சைநிற வயல் வெளிகளைப் பார்ப்பான். அவனுடைய முக ரேகைகள் அவனுக்குள் ஏதோ சோகம் இருப்பதை வெளிப்படுத் தின. அவன் மெலிந்த தோற்றமுடையவனாகவும் நல்ல விவேகியாகவும் இருந்தான்.

வகுப்பில் எப்போதும் அவனுக்குத்தான் முதலிடம். வைத்திய பீடத்திற்கு செல்வதற்காய் அதனை மிகவும் கஷ்டப்பட்டு பாதுகாத்து வந்தான். அவன் எங்களை விட இரண்டு வகுப்புகள் முந்தியவன். அவனுடைய கிராமம் எங்கள் கிராமத்திலிருந்து சுமார் ஒன்றறை கி.மீ. தூரத்திலிருந்தது. அப்படியாயின் அவன் ஒருநாளைக்கு 13 கி.மீ. நடக்கின்றான்.

அது அரசியல் சூடுபிடித்திருந்த காலம். அரசியல் கட்சிகளும் விடுதலை இயக்கங்களும் நாடுபூராகவும் வியாபித்திருந்தன. எல்லோரும் ஏதோ ஒரு கட்சியில், இயக்கத்தில் இணைந்திருந்தனர். முஹம்மத் தனக் கென்று உணவு, தூக்கம், வேலை என்பவற்றிற்கு உறுதி யான ஒரு ஒழுங்கை வைத்திருந்தான். அந்த ஒழுங்கி லிருந்து அவனை வெளியேற்ற யாருக்கும் அனுமதிய ளிக்க மாட்டான்.

ஒருநாள் அவனிடம் அவனின் தந்தை பற்றிக் கேட்ட போது மிகச் சுருக்கமாக ''ம்.. அவர் என்னை சந்திக்க வில்லை... என்னை ஒருபோதும் இங்கு அவர் சந்தித்த தில்லை. சில வருடங்களுக்கு முன்னர் அவர் இறந்து விட்டார்... அல்லாஹ் அவருக்கு அருள்பாலிக்கட்டும்'' அவன் தந்தை பற்றி கூறும்போது அவனுடைய வார்த் தைகளை ஆழ்ந்த சோகம் திரையிட்டது.

பலபோதுகளில் அவனது தந்தை பற்றிப் பேசினால் விரண்டோடி விடுவான். அது எனது உள்ளத்தில் முட் களைக் குத்திற்று. அவனோடு உணவறையில் அமர்ந்தி ருந்தபோது கோபமாகக் காணப்பட்டான். எஞ்சியிருந்த உணவை வேகமாக விழுங்கிவிட்டு சென்றுவிட்டான். சிலவேளை அவனது செயற்பாடுகளில் காணப்பட்ட இந்த மயக்கம்தான் அவனது தந்தை பற்றி அறிய என் னைத் தூண்டியது. அவன் என்னை விட்டுவிட்டு அவன் பேணுதலாக தொழுகின்ற தொழுகைக்காக சென்றுவிடு வான். அல்லது ஏதாவது ஒரு புத்தகத்திடம் தஞ்சமடைந்து விடுவான். அல்லது தனது கைகுட்டையைக் கழுவுவ தற்கு குளியலறைக்குச் சென்றுவிடுவான். எப்பொழுதும் விரண்டோடி விடுவான்.

நான் பல தடவைகள் அவனிடம் ''நீ ஏன் ஓர் அரசியல் கட்சியோடு இணைந்துகொள்ளக் கூடாது'' என்று கேட்டுள்ளேன். அப்போதெல்லாம் அவன் ''இந்த நாட்டிற்கு சேவை செய்யக் கூடிய ஒரேயொரு வழி இந்த அரசியல் கட்சிகள்தான் என்பதை நான் நம்பவில்லை. அறிவைத் தேடிக் கற்பதிலும் அதனை விருத்தி செய்வதிலுமே எமது பிரச்சினைகளுக்கான தீர்வை நான் காண்கின்றேன்'' என்பான்.

எனினும், நான் மீண்டும் அவனிடம் ''எங்களுடைய நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அதிகமான மாணவர்கள் ஏதோ ஒரு முகாமோடு இணைந்திருக்கிறார்கள்.'' அவன் தலையை அசைத்து ''அறிவுதான் பலம். அரசியல் கட்சிகள் இளைஞர்களின் இரத்தத்தை விற்கின்றன. நான் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மறுக்கவில்லை. எனினும், இந்தப் போராட்டத்தில் எனது பங்கு வேறு. கல்லூரியின் பாடத்திட்டமும் ஏனைய வழிமுறைகளும் எமது தேசத்திற்கான எனது செயற்பாடுகள்''

நான் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தேன். அவனுடைய பாதை எனது பாதையிலிருந்தும் சிந்தனையிலிருந்தும் முரண்பட்டிருந்தது. அத்துடன் அது அவனது அமைதியோடும் இயல்போடும்கூட முரண்பட்டது. ஏன் அவனது வயதோடும்தான். அவன் எரியும் வாலிபப் பருவத்திலிருந்தான். ஆனால் நான் அவனை ஐம்பது வயதைத் தாண்டியவனாகத்தான் காண்கிறேன். நான் அவனிடம் ''இந்தத் தத்துவத்தை உனக்கு யார் கற்றுத் தந்தது'' என்று கேட்டேன். அவன் மெதுவாக நகர்ந்து கொண்டே ''நாட்கள்... நாட்கள் எங்களுடைய ஊரிலே இப்படித்தான் சொல்வார்கள்... நான் ஒரு கோழையல்ல'' என்றான்.

எனக்கு அவனுடைய தந்தை சமாதானத்தை நேசிக்கின்ற ஒரு நல்ல மனிதராகத் தெரிந்தார். அவன் அவனை சகிப்புத் தன்மையோடும் வணக்க வழிபாடுகளோடும் விஷேடமான ஆற்றல்களோடும் வளர்த்திருக்கிறார். அவனுடைய உள்ளத்திலிருந்து போராட்டம் புரட்சி போன்றவற்றை பிடுங்கியிருக்கிறார். அவன் எப்பொழுதும் நான் காலத்தோடு போட்டி போடுகிறேன்... நான் எவ்வளவு விரைவாக எனது கல்வியை நிறைவு செய்து கொள்ள முடியுமோ அதற்கே முயற்சிக்கின்றேன்'' என்பான். அவன் அவனுடைய பாதையை நன்கறிந்திருந்தான். பின்னே திரும்பிப் பார்க்காமல் அதிலே நடக்கின்றான்.

முஹம்மத் அல் ஹத்தாத் தனது கிராமத்தவரோடும் உறவினர்களோடும் அதிகமான தொடர்புகளை வைத்திருக்கவில்லை. அதற்கான காரணத்தை அவனிடம் வினவியபோது தனிமையில் இருப்பதற்கான விருப்புதான் காரணம் என்றான். அவனது கல்விக் காலம் முழுவதும் இப்படித்தான் இருந்தது. வகுப்பு நண்பர்களிலே மிகவும் வித்தியாசமானவன். படிக்கின்ற விடயங்களில் பெண் தோழிகளோடு தொடர்புகளை வைத்திருக்கவில்லை.

அவர்களோடு கடுமையாக பழகுவான். அவர்களில் யாரேனும் விரிவுரைகளைப் பற்றி அவனிடம் கேட்டால் கொப்பியை கொடுத்துவிட்டு மௌனமாக நழுவி விடுவான். பெண்களில் யாரேனும் அவனைப் பரிகசித்தால் வெட்கித்து சென்றுவிடுவான். அவனுக்கருகில் உட்கார்ந்துவிட்டால் மெதுவாக நகர்ந்துவிடுவான். ஒரு தடவை திடீரென்று நான் அவனிடம் ''நீ யாரேனும் ஒரு யுவதியை விரும்பவில்லையா?'' என்று கேட்டேன்.

மெதுவாக சொன்னான் ''இது தேவையில்லாத பேச்சு''

''அப்படியென்றால் நீ கலியாணம் முடிக்க மாட்டியா?''

அவன் திடுக்கிட்டு என்பக்கம் திரும்பி ''அப்படி யார் சொன்னது, நான் கலியாணம் முடிப்பது கட்டாயம். எனினும் அதற்கு இன்னும் காலம் இருக்கின்றது'' என்றான்.

நான் அவனிடம் சொன்னேன் ''காதலில்லாமல் எப்படி கலியாணம் முடிப்பது''

அவன் உறுதியாகச் சொன்னான் ''திருமணம் வரும் போது அதனோடே காதலும் வரும்''

அவனை நெருங்கி அவனுடைய தோளைத் தடவியவாறு ''என்றாலும், எங்கள் உள்ளங்கள் அதன்பால் சிறகடிக்கின்றனவே'' என்றேன்.

மென்மையாக சிரித்தான். பின்னர் ''நாய்களும் தான் - என்றாலும் என் உணர்வுகளை எப்படி கட்டுப்படுத்த வேண்டும் என்பது எனக்குத் தெரியும். எனது வாப்பா தனக்கென்று சில ஒழுங்குகளை வைத்திருந்தார். எனக்கும் கூட சில ஒழுங்குகள் இருக்கின்றன. நான் முட்டாள் தனங்களை விளங்கி வைத்திருக்கிறேன். எனது அறிவின் மூலம் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண்கிறேன். வாழ்க்கை என்னைவிடவும் உன்னைவிடவும் எனது வாப்பாவை விடவும் பலமானது. அது எவ்வளவுதான் பலமானதாக இருந்தாலும் பலவீனத்திற்கும் இழிவிற்குமே அது இட்டுச் செல்லும். இதுவே விதியாகும்'' என்றான்.

நான் சிரித்துக் கொண்டு ''நான் காதலைப் பற்றிப் பேசுகின்றேன்'' என்றேன்.

அவன் ''நான் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றேன்'' என்றான்.

''நண்பனே காதல் இல்லாத வாழ்க்கை வரண்ட பாலைவனமாகும்'' என்று நான் முணுமுணுத்தேன்.

அவன் தனது சிறிய பலகை மேசையில் சாய்ந்து கொண்டு ''அன்பு உங்கள் மூளையில் பாலியலோடு இணைந்திருக்கின்றது. வாழ்க்கையில் அன்பிற்கு பல பக்கங்கள் இருக்கின்றன'' என்றான்.

மணியொலித்தது. அவன் சிறு தூக்கத்திலிருந்தவனைப் போல எழுந்தான். பின்னர் ''என்னுடைய நேரம் சரி, நீ போய் உன்னுடைய வேலைகளை செய்'' என்று கத்திக் கொண்டு சென்றான்.

நான் அவனிடம் பரிகாசமாக ''நீ என்னை விட்டு விட்டுப் போறியா?'' என்றேன்.

அவன் வெட்கத்தோடு சொன்னான் ''எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. கொஞ்சம் நேரம்தான் இருக்கிறது''

நான் விடுதிக்குத் திரும்பியபோது என் தந்தை எனக்காக காத்துக் கொண்டிருந்தார். ஊரிலிருந்து உணவுப் பொருட்களையும் உறவினர்களின் வாழ்த்துக்களையும் எனது மாதாந்த கைச்செலவுப் பணத்தையும் எடுத்து வந்திருந்தார். அவரைக் கண்டவுடன் வழமை போன்றே அவருடைய கையை முத்தமிட்டேன். அவர் என்னை நீண்டநேரமாக எதிர்பார்த்து காத்திருந்திருக்கிறார் என்பதை அறிந்துகொண்டேன். அவர்; நான் எங்கிருந்தேன் என்பதை கேட்டபோது எனது நண்பன் முஹம்மத் அல் ஹத்தாதைப் பற்றி சொன்னேன்.

நான் அவனைப் பற்றியும் அவனுடைய வாழ்க்கை பற்றியும் எமது ஊருக்கும் அவனது ஊருக்கும் இடையிலான தூரம் பற்றியும் சொன்னபோது ''ஆம்... எனக்கு ஞாபகம் வருது.. எனக்கு அவனுடைய வாப்பாவைத் தெரியும்... ஹஸன் ஹத்தாத்'' என்றார்.

எனக்குள் ஆச்சரியம் மேலிட்டது. இதுதான் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம். என்னைக் குழப்பிக் கொண்டிருக்கின்ற எனது நண்பனைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினேன். எனது தந்தை என்னை சந்தேகத்தோடு பார்த்தார். அவர் ஹஸன் ஹத்தாதைப் பற்றி நிறையவே தெரிந்திருக்கின்றார் என்பதை விளங்கிக் கொண்டேன். என்றாலும் அவர் ''இந்த விடயம்பற்றி நீ யோசிக்காதே. உனக்கு எதற்கு அவனுடைய வாப்பாவின் கதைகள்.''

முஹம்மத் அல் ஹத்தாத் ஒரு நல்ல முயற்சியுள்ள இளைஞன் என்பது உனக்குப் போதுமானது... நீயும் அவனைப்போல் இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். இந்தக் குருட்டு உலகத்தின் கோஷங்களிலிருந்து நீ தூரமாகிவிடு. இந்தக் காலத்தில் மக்கள் பைத்தியத்தாலும் குழப்பத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுபோல் இன்றில்லை. நான் என்றைக்கும்போலவே நீ அரசியலில் இறங்குவதை எச்சரிக்கின்றேன்''

நான் தந்தையின் முகத்தை அதிகம் பார்க்க விரும்பவில்லை. இந்த உலகத்தில் எங்கட நாட்டில் நடக்கின்ற விடயங்களுக்கு நாங்கள்தானே பொறுப்பாளிகள். என்றாலும், நான் எனது நண்பனின் தந்தையைப் பற்றி அறிவதிலே கவனம் செலுத்தினேன். நான் தொடர்ந்து பல கேள்விகளைக் கேட்டதால் எனது தந்தை மறுக்க முடியாமல் ''ஹஸன் ஒரு நல்ல மனிதர். ஆயுதத்தை சுமந்துகொண்டு எல்லா இடங்களுக்கும் சென்றார். மக்களின் உள்ளங்களில் பயம் இறங்கியது. அவர் நல்ல வீரமுள்ள மனிதராக இருந்தார். என்றாலும், விரைவாக கோபப்படுவார். புத்தி கூர்மையுடையவர். அதற்கேற்பவே தீர்மானங்களை எடுப்பார்.

அவர் எந்த விடயத்திலும் ஆயுதங்களை நம்பியதில்லை. அவரிடம் இல்லையென்று சொல்லும் பழக்கமும் இருக்கவில்லை. மக்கள் அவரோடு திறந்த மனதோடு பழகுவார்கள். அவர் சொல்பவற்றை நம்பினார்கள். ஊரே அவருக்குக் கீழ்ப் படிந்திருந்தது. ஊர் தலைவர் கூட அவருக்குக் கீழ்ப்படிந்தார். அவரது வேண்டுகோள்களுக்குப் பதிலளித்தார். சில வினாடிகள் எனது தந்தை மௌனமாக இருந்தார். பின்னர் இந்த விடயத்தை நாங்கள் விட்டுவிடுவோம். அவனைப் பற்றி சொன்னது போதும். அவன் இப்போது உனது நெருங்கிய நண்பன் என்றார்.

நான் தந்தையின் கைகளைப் பிடித்து கெஞ்சினேன். ''வாப்பா நான் உறுதியாக சொல்கிறேன். இந்த விஷயம் அவனோடு உள்ள எனது தொடர்பைப் பாதிக்காது'' அதற்கவர் ''மோசமான விளைவுகளை விளைவிக்கின்ற ஆயுதங்களில் பிரச்சினையில்லை. பிரச்சினை இங்கு



தானிருக்கின்றது'' என்று தனது தலையைக் காட்டினார். ''எங்களுடைய தலைகளில் கூடுகட்டியுள்ள பிரச்சினைகளே எங்களது நோக்கங்களையும் வழிமுறைகளையும் கட்டுப்படுத்துகின்றன.''

ஹஸன் ஒரு பெரிய தோட்ட முதலாளியிடம் வேலை செய்தார். அந்தக் காலப்பிரிவில் அரசியல் போராட்டங்களும் புரட்சிகளும் மிக மோசமாக இருந்ததை நீ அறிந்திருப்பாய். ஹஸன் முதலாளிமாரின் கைகளில் பலிக்கடாவானார். அவர்கள் அவரை கைக்கூலியாக்க முயற்சித்தனர். அவர் தவிர்ந்துகொண்டார். எனவே அவரை வேலையிலிருந்து விலக்கிவிட்டார்கள். அப்போது அவர் கோபப்பட்டு கூச்சலிட்டார். மீண்டும் வேலையைப் பெற முயற்சித்து தோல்வியடைந்தார்.

ஒருநாள் அவர் பாதையில் நடந்து சென்றுகொண்டிருக்கும்போது அவருடைய முகத்தில் தாளொன்று வந்து விழுந்தது. அது ஹஸனை எச்சரிப்பதாகவும் கண்டிப்பதாகவும் தான் கேள்விப்பட்டதற்கு மறுப்பாக பரிகசிப்பதும் இழிவுபடுத்தியும் அவரது முதலாளி

அனுப்பிய தூது... அவரது பசுவையும் கழுதையையும் விற்றுவிட்டு ஒரு கைத்துப்பாக்கியை வாங்கினார். அவருக்கு கடிதத்தைக் கொண்டுவந்தவனையும் பழிவாங்க வேண்டியிருந்தது. ஊரே அல்லோல கல்லோலப் பட்டது.

ஹஸன் அதனைக் கருத்திற்கொள்ளவில்லை. அவர் முதலாளியிடம் சென்று அவரைச் சுட்டார். இரத்தம் பீறிட்டது. ஹஸன் ஒரு பயங்கரவாதியாக மாறினார். உன்னுடைய நண்பனுக்கு அப்போது 5 வயதுகூட ஆகியிருக்காது. தந்தை பெருமூச்சொன்றை விட்டு விட்டு கவலையோடு தொடர்ந்தார். ''முடிவு எப்போதும்போல தெரிந்ததுதான். ஒருநாள் ஹஸன் காலையில் வெறியேறினார். அவரை எச்சரித்துக் கொண்டிருந்த கூட்டத்தினரில் ஒருவர் அவரை எதிர்பார்த்து காத்திருந்தார். அதனை அறிந்த ஹஸன் அதனை பெரும் அவமானமாக கருதினார். அந்த ஒற்றனிடம் சென்று அவருடைய துப்பாக்கியைக் காட்டினார். அதனை அவதானித்துக் கொண்டிருந்த இன்னுமொருவன், ஹஸன் ஒற்றனை சுட முன்பு அவரை சுட்டுவிட்டான். அல்லாஹ் அப்படித்தான் நாடியிருந்தான் போலும். ஹஸனின் துப்பாக்கி இயங்கவில்லை. அதனைச் சரி செய்ய முதல் மற்றையவன் முந்திவிட்டான். மக்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் திரண்டு வந்தனர். ஆனால், அவர்களால் ஒரு பிணத்தையே பார்க்க முடிந்தது. அவர்கள் அவருடைய மனைவியையும் மகனையும் அழுதுகொண்டே பார்த்தனர்.


நான் என்னுடைய தலையைக் குனித்துக் கொண்டேன். ''இப்ப வெளங்கிச்சி,..'' என்று முணுமுணுத்தேன். கண்ணீரை அடக்கிக் கொண்டே எனது தந்தை என்னிடம் ''அல்லாஹ் மீது ஆணையாக, நீ உன் நண்பனிடம் இதனைத் தெரிந்துகொண்டதாகக் காட்டிக் கொள்ளவே கூடாது'' என்றார்.

இப்போது முஹம்மத் அல் ஹத்தாத் ஒரு விஷேட பேராசிரியர். அவனைச் சூழ எப்போதும் வைத்தியர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு மத்தியில் அவன் வெள்ளை கோட் அணிந்து நிற்கிறான். அவன் குறிப்புகளைக்கூற அவர்கள் எழுதிக் கொள்வார்கள். அவன் கட்டளையிட்டால் அதனை நிறைவேற்ற வைத்தியர்களும் தாதியர்களும் விரைவார்கள்.

பத்திரிகையாளர்கள் நவீன மருத்துவ தகவல்களைப் பெற்றுக்கொள்ள அவன்பின்னால் அலைகின்றார்கள். அவனுடைய சிகிச்சை முறையிலுள்ள திறமை அனைவராலும் வியந்து கூறப்படுகிறது. கலாபீட அமர்வுகளில் அவனுக்குத் தனி இடமுண்டு. அவன் அவனுடைய தொழிலையும் குடும்பத்தையும் தவிர வேறெதனையும் சிந்திப்பதில்லை. அவனுடைய தாயும் அவனுடனே நகரத்தில் வாழ்கிறாள்.

நல்லதொரு குடும்பத்தில் அவன் திருமணம் முடித்தான். அவனது மனைவி அடக்கமானவள். அதனால் அவளை இதுவரை நான் கண்டதில்லை. அவனது இரு பிள்ளைகளும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அரிதாக அவன் கிராமத்துக்குச் சென்றால் மக்கள் அவனை அன்போடு சூழ்ந்துகொள்வார்கள். இப்போது புதிதாக நவீன வடிவில் கட்டப்பட்ட அவனது வீட்டின் வாசலில் 80 வயதுடைய ஒரு மூதாட்டி ''ஸுப்ஹானல்லாஹ் வாசலில் அல்லாஹ் எல்லாவற்றிற்கும் சக்திபடைத்தவன் என்று'' சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

# கலங்காதே



நாளைய விடியல்கள் உனக்காய் விடிய
சுவனம் வரை காத்திருக்கையில்
எதற்காக கலங்குகிறாய்?

காயமடைந்த உன் உள்ளத்திற்கு
மறைவரிகளைக் கொண்டு
உரமிட்டுக் கொள்
இறைவனுக்காய் என்றுமட்டும்
நீ வாழக் கற்றுக் கொண்டால்
உன் வாழ்வும் ஒளிவிளக்காய் ஒளிரும்
நாளை சுவனம் வரை.

பின்த் ஸாஜஹான்
புத்தளம்

## சந்தேகம்

அடையாளம்
தெரியாமல் வருகிறாய்...
கனியையும் கல்லாக எண்ண
வைக்கிறாய்...
ஒன்றின் அர்த்தத்தை பல
திசைகளில்
அர்த்தம் காண
வைக்கிறாய்...
அடையாளம் காணாத
நீ
வந்து சென்றதுமே
இனம் தெரிகிறாய்...

நுஸ்லா பின்த் ரபீக்

## சுவனமா நரகமா?

முடிகின்ற உலகினை
பற்றிப்பிடிக்கின்றீர்
முடிவில்லா உலகினை
அறியாதிருக்கின்றீர்...

உண்மை வேதத்தை
உணர மறுக்கின்றீர்
பொய்மை எதுவோ
அதையே அழைக்கின்றீர்...

மாநபி கூறியதை
அசட்டை செய்கின்றீர்
மடையர்கள் கூறுவதை
கேட்டு நடக்கின்றீர்

ஸஹாபாக்கள் சரிதையை
சாத்திரம் என்கின்றீர்
ஸானியாவின் கதையை
சரித்திரம் என்கின்றீர்.

நன்மை அனைத்தையும்
நாசம் செய்கின்றீர்
தீமை அனைத்தையும்
அணைத்துக் கொள்கின்றீர்.

இறுதியில் செல்வது
எங்கே என்று நீரே அறிவீர்
இனிதே உணர்வீர்.

ரஜீனா பின்த் இஸ்மாயில்
ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்,
குரீகொடுவ.

## மாறிய சரிதம்


நேயங்களெல்லாம் காயங்களாய்
காயங்களெல்லாம் நேயங்களாய்
மாறிய சரிதமென்னவோ
கனதியில் - வாழ்விலே ஒரு சாயல்
மனதிலே ஒரு சாயல்
வெறுமையில் சில சிரிப்புக்கள்
வெளியில் சில புன்னகைகள்
உள்ளத்தில் உள்ள உண்மைகளை
உள்ளுக்குள் உள்ள குமுறல்களை
விழியிலுள்ள வலிகளை - என்
வழியிலுள்ள குழிகளை - யாரறிவார்
யாவையுமறிந்த இறையோனைத்தவிர.

மாற்றம் பெறுகின்றது - என்
மனம்-அமைதியாலல்ல
இப்போதெல்லாம்
கரடுமரடு எண்ணங்களால்
காயம்பட்டு-கவலைப்பட்டு
கடுமையாகி-கரைபிடித்துவிட்டது
என் உள்ளம்.

ஈமானிய சலவைத் தூளிட்டு
இன்றே சலவை செய்ய வேண்டும்
பண்பாடுகளைப் பட்டை தீட்டி
பதித்துக் கொள்ள வேண்டும்
உறுதி பூணுகிறேன்.

இனி என் வாழ்வு
திசை மாறி சரிதமாகின்றது...

நுஸ்ரா பின்த் யூஸுப்
இஸ்லாஹியயா வளாகம்



## தொலைந்துபோன ஒற்றைப் பாதணி

பஸ்ஸிலோ ரயிலிலோ
பிசுபிசுத்து வழியும் அவசரப் பயணங்களின்
ஏற்ற இறக்கங்களிலோ
மடி நிறைந்த மலரின் நலனில் மட்டுமோ
குவியமிடும் கவனங்களை விட்டும்
இடறித்தான் போய்விடுகிறது
சில பொழுதுகளில்
அதன் ஒற்றைப் பாதணி.

கிண்ணியா எஸ்.பாயிஸா அலி.

# மனமே கொஞ்சம் அமைதியாக!!!

என் நெஞ்சம் விம்முகிறது
வாய் திறக்க முடியாமல்
ஊமையாய் அழுகிறேன்.

என் வருத்தம் கவலையை
உற்றுப் பார்க்கிறேன் - எனக்கு
இவ்வளவு சோதனையா?

அப்பப்பா...
என்றாலும்
என்னால் முடியும்.
பொறுமை காக்க முடியும்!

கண்ணீர் சிந்தி
கத்தியழுதால் பாரம் குறையுமோ?



நெஞ்சிலுள்ளதை வெளியேற்றி
வெறுமையாகிடும் அவ்விடத்தை
ஷைத்தானின் கொடிய நகங்கள்
தீண்டுமுன்
அல்குர்ஆனால் நிரப்பிட
என் சிந்தனைக்குக் கட்டளையிடு
ரப்பே!

நானும் ஓர் ஐயூபின் வாரிசாய்
மாற உன்னிடம்
கையேந்தும்
மிகச் சிறிய அடிமை இவன்!!!

ஹனீப் பலாஹ்

# உனக்கு நிகரில்லை

கற்பனைக்கும் எட்டாத
கட்புலனுக்கும் அண்டாத
மர்மம் நிறைந்தது – அந்தப்
பிரபஞ்சம்...!
சிறு வித்து
பெரு விருட்சமாகி,
நிழல் தருகிறது...!
மண்ணுக்கு வெளியே
முட்டி மோதி
எட்டிப் பார்க்கும்
மின்னல்
வெட்டித் தெறிக்கும்
நீரூற்றுக்கள்...!

மின்னல் சிரிக்க
மேகம் இடிக்க
மழையென அழுதிடும் வானம்...!
பச்சைப் புல்லும்
கொச்சை மொழி பேச
நெஞ்சை அள்ள வரும்
தஞ்சைக் காற்று...!
வண்ணம் குழைத்து
வரையப்பட்ட வண்ண
ஓவியத்தைச் சுமந்தவாறு
வானில் பறக்கும்
வண்ணத்துப் பூச்சிகள்...! என்

இறைவனே, –
படைப்பாளர்களில் நிகரற்றவனாகி
விட்டாய்...! – இதோ
உன் நிகரற்ற
படைப்பாற்றலை வியந்து – என்
விழிகள் அவற்றிலே
மேய்கிறது...!

ரூமி ரிஷானா
சில்மியாபுர

# கொடுத்திடு!

இருண்டுக் கிடக்கும் - உன் இதயத்திற்கு
இமை திறந்து, ஒளி கொடுத்திடு!
சோம்பியிருக்கும் - உன் ஆன்மாவிற்கு
ஈமானிய பலம் கொடுத்திடு!
துரோகங்களால் கட்டப்பட்டாலும்
சோகங்களால் முடிச்சிடப்பட்டாலும்
இன்பங்களால் அணைக்கப்பட்டாலும் - உன்
உள்ளத்திற்கு
இறை நினைவைக் கொடுத்திடு!

வேதனை தொட்டிடும்போதும்
சோதனைகள் தட்டிடும்போதும்
சாதனைகள் முட்டிடும்போதும் - உன்
உள்ளத்திற்கு உரமூட்டும்
குர்ஆனிய வரிகளை சுமக்கக் கொடுத்திடு!

உன் சுவாச நிமிடங்களிலும்
உன் உதட்டின் உச்சரிப்புகளிலும்
உன் எண்ணப்படகுகளிலும்
சிக்கித்தவிக்கும் உன் ஜீவனுக்கு - தினம்
இறையருளை கற்றுக் கொடுத்திடு!


நுஸ்லா லியாஸ்டீன்
ஆயிஷா சித்தீகா கலாபீடம்

# எனது வாழ்க்கை முழுவதும் அல்லாஹ்வுக்கே...

சில வருடங்களுக்கு முன்பு இணையத்தளத்தில் இஸ்லாமிய கஸீதாக்களை தேடிக் கொண்டிருந்தேன். வழமையாக தேடலின்போது முதலாவதாக வரும் தலஅல் பத்ரு அலைனா, யா தைபா லைலா போன்ற பாடல்களுக்குப் பின்னால் வித்தியாசமான காட்சியுடன் கூடிய ஒரு பாடல் காணப்பட்டது. அந்தப் பாடலை கேட்டபோது ஆச்சரியம் மேலிட்டது.

எனது வாழ்க்கை முழுவதும் அல்லாஹ்வுக்கே.

அவனைத் தவிர எனக்கு வேறொரு தலைவன் இல்லை. அந்த உயர்ந்த இரட்சகனை நான் விரும்புகின்றேன். அந்த அன்பின் காரணமாக நான் அவனுக்குப் பயப்படுகின்றேன் என்ற வரிகளை ஆரம்பமாகக் கொண்ட பாடல் என்னை மிகவும் கவர்ந்தது. அதன் பின்னர் அந்தப் பாடலைப் பாடிய யஹ்யா ஹவ்வா என்பவரைப் பற்றித் தேடினேன்.



சிரியாவின் ஹமா நகரில் 1976 ஆம் ஆண்டு பிறந்த யஹ்யா ஹவ்வா தனது உயர் கல்வியை மக்காவில் பூரணப்படுத்தினார். அதன் பின்னர் ஜோர்தானுக்கு சென்று அங்கு சட்டம், இஸ்லாமிய ஷரீஆவில் பட்டம் பெற்றார். தற்போது உளவளத்துணைத் துறையில் முதுமானிப் பட்டத்தைப் பெறுவதற்காக தயாராகிக் கொண்டிருக்கிறார்.

1999-2003 வரை ஜோர்தானின் தலைநகர் ஹமாவிலுள்ள அல் கலூபி என்ற பள்ளிவாசலில் இமாமாகக் கடமையாற்றினார்.

திருமணம் முடித்து ஹுதா முஹம்மத் என்ற குழந்தையின் தந்தையாக இருக்கும் யஹ்யா ஹவ்வா இதுவரை ஆறு அல்பங்களை வெளியிட்டுள்ளார். சில அல்குர்ஆன் ஸூறாக்களையும் பாராயணம் செய்து வெளியிட்டுள்ளார். இவர் அல்குர்ஆனை மனனம் செய்த ஒரு ஹாபிழும் கூட.

இவரது இசை நிகழ்ச்சிகள் பல நாடுகளிலும் நடைபெற்றுள்ளன. அவற்றில் சவூதி அரேபியா, அல்ஜீரியா, யெமன், மொரோக்கோ, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா, துருக்கி, ஐக்கிய அறபு இராச்சியம், கிரிகிஸ்தான், பஹ்ரெய்ன் போன்றன குறிப்பிடத்தக்கவை.

இவரது கஸீதாக்களை யூ-டியூப் இணையத்தளத்திலும் அவரது சொந்த இணையத்தளமான yahyahawwa.com இலும் பார்க்கலாம். மனதிற்கு அமைதியை ஏற்படுத்துகின்ற சந்தோசத்தை ஏற்படுத்துகின்ற நல்ல பாடல்களை கேட்க விரும்புவோர், பார்க்க விரும்புவோர் யஹ்யா ஹவ்வாவின் பாடல்களையும் நம்பிக்கையுடன் கேட்கலாம், பார்க்கலாம்.

# DIAMOND

ஜம்இய்யதுல் உலமாவின்
ஹலால் சான்றிதழ் பெற்றது




## P.M. MOHAMED ALI & CO.

No. 187, Prince Street, Colombo 11.
Tel: 0112 430499, 0112 446573 Fax: 0112 439477

# FAIZ BRASS

IMPORTED FB BRAND BRASS DOOR FITTINGS




Importers and Manufacture

Tel: 0773435700, 0112431356 Fax: 0112321361

Dealers Islandwide